௰௧. கிழவன் வேஷத்தில் சாத்தன் தோன்றுதல்.

விருத்தம்.

இப்படித் தேவபாலன் இந்தமா வனத்திற்பாதை
தப்பியே பசியினாலே தளம்பியங் கலையும்போது,
அப்புறம் வெகுதூரத்தி லவ்வனத் தூடேதோன்றி
முற்பட வந்தானேசு முன்னொரு கிழவன்றானே.

இராகம், மோகனம். ஆதிதாளம்.

பல்லவி.

கிழவன்வந்தானே, கிறிஸ்துமுன்
கிழவன்வந்தானே.

அநுபல்லவி.

கிழவன்வந்தானே தொழதொழநரை
கிறுகிறுதிரை, குறுகுறுநரைக்— கிழவன்.

சரணங்கள்.

௧ தப்பாடுபோன வழியுந்தெரியலைச்
சண்டாளஆடுபோய் எங்கோவிழுந்ததோ,
குப்பத்தைவிட்ட பயலாடுசெத்ததோ
குழிநரிவாயிலிரை யாச்சோஎன்றாற்போல்— கிழவன்.

௨ அஞ்சாடுமேய்த்து அலைந்தகோன்போலவே
ஆட்டுக்கோல்கைபிடித் தாட்டியும்சாலவே,
கஞ்சிகுடிக்க குடிலையுநோக்கியே
கக்கிக்கக்கிக்கக்கி விக்கிச்சிக்கிச்சொக்கி— கிழவன்.

௩ அல்லும்பகலும் கிடைவைக்குங்கோவலன்
அந்திவிழும்பனிக் கஞ்சாதகோவலன்,
கொல்லுமழைக்குப் பனிக்காகுமென்று
குளிர்காயச்சுள்ளி பொறுக்கவந்தாற்போல— கிழவன்.

௬ மாண்டுமுயிர்மீண்டுவெளி
வருவேன்கதி தருவேன்,
வனம்போவெனமனம்போதனை
வகுத்தேஇதில் வந்தேன்.

௭ வனத்திலிதுதினத்தில்இங்கே
வரக்காரணம் அறியேன்,
வாவென்றெனையேவி பர
மாவிவிட மேவி.

௮ அறிவேண்டியதாண்டபரன்
அறிவித்திடு வாரே,
அமலன்அறிவித்திலலன்
அடுத்ததல்ல வெமக்கே.

௰. இயேசுவின் மண்டலோபவாசம்.

வ ச ன ம்.

நம் உதயதாரகையானவர் இவ்வாறு தியானத்திலிருந்து எழும்பி, எறிட்டு அங்குமிங்கும் நோக்கவும், செடிகொண்ட சோலைகளால் இருள்மண்டிய அடிப்பாடில்லா வனாந்தரமே அல்லாது வேறொன்றும் காணாமல், வந்த வழியைக் கவனியாதிருந்ததால், மனிதர் காலடிபடா அவ்விடமே திரும்பவும் கூடாமல், உசிதமக்கள் குழாங்களிலும் விழுமியதாக்கொண்ட தனிமைக்கு இணங்கியதும், தம் நெஞ்சத்து உறைந்ததுமாய இறப்பு எதிர் காலவிடய மனோபவங்களோடுகூட, வனத்திலே முன்னேறி நடந்து, ஒருகால் மலைச்சிகரமும், மறுகால் நிழல்பூத்த பள்ளத்தாக்குமாய், இரவுக்கிரவு ஆதி காலக் கருவாலி மறைவோ, கேதுரு மரத்தடியோ பனிக்கொதுங்கி கெபிமறைவுநின்று, பசிகொள்ளவோ பட்சணிக்கவோ இன்றி, நாற்பதுநாள் ஒரு மண்டலம் வனமிருகாதிகள் இடைச்சஞ்சரித்து, அண்டிய மிருகம் கண்டோட, துயிலும் வேளையோ விழித்திருக்கும் காலோ அவரைத் தீண்டாமல் விலக, நெருப்பு நாகம் பறக்க, விஷப்பூச்சிகிறங்க, மிருகேந்திரனும் கொடிய வேங்கையும் ஓடி ஒதுங்க நடமாடிவந்தார் என்றவாறு.

௪ நானேபிறந்த தினந்தூதர்வந்திசை காட்டினராம்,
கானேயிருந்த இடையர்கள்வந்தெனைக் கண்டனராம்,
வானேநடத்தின மீனாலறிஞர் வழிதொடர்ந்தே
யானேதொழுவந் தெனையேத்தினாரென ளாமரியே!

௫ சீமியன்அன்னாட் டெரிசியுந்தேவ செயலதினா
லாமெனையாலயங் காணவும்வேதிகா சாரியன்முன்
பேமுனர்கூறிய வாறேபலர்மு னியற்றினராம்;
நீமமிவைக ளெனக்குணர்வித்தனை நீமரியே!

௬. இயேசுவின் தியானத்தொடர்.

கண்ணிகள்.

௧ மாதாமொழிகாதேறவும்
மறைநூல்களின் நிறையை
வகுத்துமனம்புகுத்து அதை
வைத்தேன்நிறை வித்தேன்.

௨ வேதவுரையோதுமுறை
மேசியாவின் வாசம்,
விரைந்ததெனத்தெரிந்தேன் இனி
வெளியேறுவேன் ஒளியேன்.

௩ கொண்டேன்செவிகண்டேணிலை
கோதிலொளி தூதன்
குறையேயிலாமுறைசாட்சியை
கொடுத்தான்பகை தடுத்தான்.

௪ மாய்ச்சலொடுதீட்சையதும்
வழங்கமுகில் முழங்க
வானாதிபன்நானே மகன்
ஆனேன்என லானார்.

௫ வாணத்திருந்தாணமகா
மாட்சிபெறு காட்சி
வையத்தவர்உய்யத்தவஞ்
செய்யநானே னைய.

௨ பிள்ளையாயிருந்தேனப்போ பிள்ளைகட்குரியகேளி
எள்ளளவெனக்கேயில்லை யென்மனமெந்தக்காலும்
தெள்ளிதாயறியக்கற்க தேயத்துநலத்தைவேண்டி
யுள்ளதுபுரியநாளு முட்புகுந்ததுவேவானே!

௩ நன்றியான்புரியவுண்மை நாலறவிருத்திசெய்தற்
கென்றியான்பிறந்தேனத்தா லென்வயதவர்க்குளேயா
னொன்றியாயறநூல்கற்றே னுள்ளத்திவினிவாய்க்கொண்டு
நின்றியானதையானந்த நிறைவெனவெடுத்தேன்வானே!

௪ னூலதிற்றேறிபன்னீர் றுதலியபருவந்தன்னில்
ஆலயம்புகுந்துவேத ஆரியர்தமக்கும்மற்றும்,
சால்வுமறிவுண்டாகச் சாற்றினேன்கேட்டயாவ
ராலுமேவியக்கப்பெற்றேன் அதிசயமய்யாவானே,

௫ இன்னமுமிவைகளாலே யென்னுளந்தணியவில்லை;
பொன்னமாபெரியசெய்கை பேசிமேலெழும்புதுள்ளம்,
மன்னிலம்பிழைக்கவுண்மை மகத்துவதிவ்யநீதி
என்னவாயெழும்புமென்றே எண்ணமுண்டாகுதய்யா!

---

௮. தாயார் சொன்னவைகளை நினைத்து இயேசு தியானித்தல்.

கலித்துறை.

௧ ஓயாதசிந்தனை மாயாகெவுத்திகண் டென்னருமைத்
தாயாரெனக்கு வசனித்தவைகளுந், தாரணியோர்
சேயாயுதித்த மனுமகனொன்றே தேவனுடை
நேயாதிசேயெனச் சாட்சியுங்கூறுதல் நிச்சயமே.

௨ மாளுமனுடன் மகனலநீவிரி வான்புவியை
யாளுமனந்த பரப்பொருள்உன்பிதா ஐயமிலைக்,
கேளுமுனது பிறப்பினைமுற்படக் கீறிவிட
வாளும்அருபனும் வந்தானெனச்சொனள் மாமரியே!

௩ பெரியவனாகிப் பிரபலன்றுவிதின் பீடுபெறு
மரியணைவீற்றிருந் தந்தமிலாவர சாளுகையி
னுரியவனாவையென் றுன்பிதாவானவ ரும்பர்களி [யே!
லொருவனைக்கொண்டறி வித்தானெனச்சொனளோமரி

உ ஆயுதவருக்க மற்புதவுயர்ஞானம்,
அதனோடதோகதி கிருத்திமமூனம்,
பேயிதில்விழுந்தா முடைவதூனம்
பின்னேன் எதிர்க்கவேணும்? சாத்தனுக்
கின்னேன் எதிர்க்கவேணும்?— ஜெய ஜெய.

௩ தந்தைகுமாரன் றமையறிவாரே,
சருவசமர்த்தையு மளித்ததுநேரே;
வந்திடுசோதனை கெடிவலுபோரே
மைந்தன் அகற்றுவாரே, தாதையின்
சொந்தன் அகற்றுவாரே— ஜெய ஜெய.

௪ அள்ளல்வஞ்சனையுர மடியொடுவிடவே,
அலகையின்றந்திரஞ் சருவமுங்கெடவே,
வள்ளலனுதியின் மகன்பெயர்ப்படவே,
வஞ்சகன் முடிவிழவே, ஆதிமா
பிஞ்சகன் முடிவிழவே— ஜெய ஜெய.

எ. வனத்திலே தேவசுதன் தனித் தியானஞ் செய்தல்.

விருத்தம்.

தீட்சைபெற்றுச் சிலநாளாய்ப் பெதபாராவிற்
றேவசுதன் [illegible] நராமீட்கு
மாச்சரிய கிரியையின்மேல் மனதையூன்றி
யாய்ந்துவர, ஒருநாளில் பரிசுத்தாவி
யோச்சலினூற் புறம்பெயர்ந்து தனிமையாக
லூரையிழிந் தடியடியாய் வனத்தைச்சேர்ந்து,
பேச்சடங்கா நினைவுகளாற் றியானமாரி
பெய்திட்டார் பாவமறச் செய்திட்டாரே.

தியானம்.

உள்ளத்தினுணர்வாற்காதி லுட்புகும்வயனத்தாலும் [னில்
வெள்ளத்தினளவாயெண்ணம் விடலிலாதெழும்புதென்
னுள்ளத்தானுருபியென்ற னிதையத்திலிவைகளாலே
விள்ளத்தானதிகமான விழைவெழலெனவோவானே!

௬ விசுமிஸ்திரிவித்து வெளிப்பட்டதே அந்தோ!
நாசரேத்தேசுவே நாரியின்வலுவித்து!— பண.

௭ பாலன்பிறந்தநாள் பயங்கொஞ்சமோஎமக்கு
கோலன்வளர்பிராயம்! வாலசிங்கம்போலாச்சே—பண

௮ நாளொருமேனிகொண்டார் ஞானமும்வீரமுமாய்
ஆளுகைஅவர்புயம்! அவர்கையிலேஜெயம்— பண

௯ தீர்க்கன்யோவான்ஒருவன் திருமகனூர்வர
மார்க்கமதுதிருத்தி வருகிறான்வனங்கனம்— பண

௰ வாருங்கள்யாருமென்று வரவழைத்தவர்மேலே
நீருமிறைத்துஸ்நானம் நிதமும்அளிக்கிறனே— பண

௰௧ தேவகுமாரனுஞ் சேர்ந்துபெற்றான்ஸ்நானம்
பாவம்போகஅல்ல பரிசுத்தமாகஅல்ல— பண

௰௨ சாதிகளேசுவினை சமுசயமின்றியவர்
பாததரிசனை பண்ணஅறிகுறிக்கு— பண்

௨. சாத்தானின் பரிதாபத்தொடர்.

விருத்தம்.

தரிசனை யென்றபோதே சாத்தனின் மனதுவெம்பி
எரிதழல் நிகராய்சீறி எடுத்துரை யிடையேவிட்டு
நெரிநெரி யெனப்பல்தாக்கி நெட்டுயிர்ப் பெறிந்துதேறி
சரிதையைத் தொடர்வோமென்று சாற்றுவான் கூற்றுவானே.

தரு.

க அந்தரவல்லவரே, இந்த
அம்புவியாளும் பிரபுகளே
வந்திருடியுமே, கை
வணங்கினேன்தேவ மகனடியை.

உ தீட்சைகழிந்தபின்னர், நதி
தெண்ணீரைவிட்டு கரைப்படவும்
சூட்சமுகில்ப்படலம், அதன்
சோதிகபாடமது திறக்க.

௬ சாட்சியிட்டமுறை தீட்சைகொண்டாரேசு
    தற்சமயமுகில் கீறவே!
  மாட்சிமைஆவியும் சூட்சப்புறவுரு
    வந்துதரித்தவர் மீதிலே.

௭ தந்தைக்கடவுளார் விந்தைமகவென
    சாட்டியிட்டார்சத்த மாகவே!
  இந்தப்புதுமையால் வந்தவனைவரும்
    என்னே! எனக்கிலி கொள்ளவே!

௩. பூதகணத்தோடு சாத்தான் துக்கித்துச் சொல்லுதல்.

விருத்தம்.

சக்கரஞ்சூழுலெதிரி திவ்யசாட்சி
  தனைக்கேட்டங் கிடிபேறுண் டயர்வாய்ந்த
முக்கியவான் கரியுடையோன் றனைக்கண்போட்டு
  மூர்க்கநெருப் பாலழன்று வெளிநாப்பண்ணில்
சிக்கெனத்தன் னிடஞ்சேர்ந்து வலவராந்தன்
  சேனைகளைப் பயில்கூவி சபையாய்சேர்த்து
துக்கமுக மாயலகை யனைத்துங்கேட்க
  சூதினன் சாத்தனிவன் ஓதினனே.

இராகம், தசாவந்தி. பல்லவி. ஆதிதாளம்

பண்டைவிதிவிளைந்ததோ! தேவர்களே! எம்
பழையவினை வளைந்ததோ!

சரணங்கள்.

௧ மண்டலதிசையெலாம் மனம்போலே இதுவரைக்
  கொண்டனுபவித்தோமே குடிகெட்டதேஇதோ!– பண்

௨ மக்களின் தொகைப்படி வருடங்களெத்தனை
  சக்கரமிதைஆண்டோம் சரியாச்சுதே! இதோ!— பண்

௩ ஆதமோடேவையன்னை ஆதமானநாண்முதல்
  பூதலமிதைஆண்டோம் போச்சுதெலாமிதோ!— பண்

௪ இஸ்திரிவித்தெழும்ப என்றலேபோமென
  நித்தங்கெடிகொண்டோம் நிசமாச்சுதேயிதோ!— பண்

௫ கர்த்தன்விதிகள்நெடுங் காலம்சென்றும்வரும்
  எத்தனையுகங்களும் இறைக்கொருநொடியாமோ!—பண்

௫ எங்கள்கதி அண்ணனுக்கு திண்ணனுக்குமங்களம்
இன்பவேதக்கண்ணெளிக்குத் தண்ணளிக்குமங்களம்
பொங்குசபைநாதனுக்குப் புகழொருவேதனுக்கு
தங்குமறைப்போதனுக்கு சருவசங்கீதனுக்கு— சிரேசு.

உ. ஆரம்ப விடயம்.

விருத்தம்.

முந்தகால் மல்கியாவும் முகிலரு பனுஞ்சொன்னுற்போ
லந்தநாள் மலைப்பிரதேச மருந்தவன் யோவான்தோன்றி
வந்தவர் தமக்குத்தீட்சை வழங்கினன் கிறிஸ்துநாத
ருந்தம திஷ்டஸ்நான முற்றனர் சொற்றுவேனே.

இராகம், சாவேரி. திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

க வாசம்வீசும்பர தீசுஜெயாஜெய!
நேசயுவான்றேன்றின னிதோ!
தேசதேசமெலா மோசைமளமள
சித்தனிவன் காளமூதவே!

உ வந்ததுவானர சிந்தோகுணப்படும்
மாந்தரே! என்றுரை கூறவே!
சிந்தைகலங்கியே அந்தத்திசையினர்
சேர்ந்துவந்தார்ஸ்நானம் வேண்டியே!

ஈ சூசைமகனென்னு நாசரேத்தானுமே
[illegible]ருசான்[illegible] அண்டவே!
[illegible]ருவினில்
ஊரில்ஒருவன்போல் காணவே!

ச கிட்டவராமுனர் மட்டிட்டனேயுவன்
கேவலதரிசனை மேவியே!
திட்டமதாய்கரி யிட்டனனேயிவர்
செப்பரிமாண்புளார் சாலவே!

௫ பிந்திவந்தாரிவர் முந்தியிருந்தவர்
பேதையெனக்கிவர் மேதையே!
இந்தப்பரிபூரணர் முந்தமுந்தவர!
ஏழைகுறைந்திட வென்னவே.

MILTON'S

PARADISE REGAINED

IN TAMIL ODES

BY THE AUTHOR OF

"ATHINANTHAVANA PIRALAYAM," &c. &c.

ஆதிநந்தாவன மீட்சி.

இது

ஆதிநந்தாவனப் ப்ரளயு

பாடியது.

MADRAS:

PRINTED FOR THE AUTHO.

BY H. W. LAURIE, CHRISTIAN KNOWLEDG

No. 18, Church Street, V

1868.

PARADISE REGAINED.

ஆதிநந்தாவன மீட்சி.

காப்பு.

ஒருவனடங் காமையி னுசிதபரதீசதி
னுரிமைபறி போனவயனை

மொட்டிநந் தாவனப் பிரளயம்பாடியதை
யுலகினுக் களித்தயானே,

மருவளர சோதனை யாவினுநின்றுபேய்
மயலுதறி வஞ்சம்வென்று,

வயமறக் கூளியை யோட்டியேதேனையழி
வனமதி லெழுப்புசிங்கன்,

திருமனுவின் றிண்ணிய கீழ்ப்பணிவினைல்செயர்
திகழுவலை மீட்சிபாட

சிரணி யூட்ட லலகைமீ தேசுபெறச்
செலுத்து தூ யாவி! வேத,

வரியில்வி ளங் காமலே மறைவுபெறுமாண்பொருள்
வளவெ னது கவிவிளங்க

வந்திடாய்! நின்னருள் தந்திடாய்சாஷ்டாங்க
வணங்கினேன் வணங்கினேனே!

முதலாவது:

பரீட்சாதி காண்டம.

க. மங்களம்.

விருத்தம்.

சத்துரு பழையபாம்பின் தலையது நசுங்கஏவை
இஸ்திரி வித்திற்றோன்றி ஏதனை யெமக்காய்மீட்டு
நித்திய கொடையாயீந்த நீடருள் கிறிஸ்துநாத [வேனே.
கர்த்தன்மேற் றுதியதாய்மங் களஞ்சொல்வேன் வளஞ்சொல்

இராகம், சுருட்டி. பல்லவி. ஆதிதாளம்.

சீரேசுநாதனுக்குச் செயமங்களம்—தேவ
சேயேசுநாதனுக்குச் சுபமங்களம்.

அனுபல்லவி.

பாராளும்ராசனுக்குப் பரமபத்ராசனுக்குப்
பேராளும்லாசனுக்குப் பேயரவுநாசனுக்கு— சீரேசு.

சரணங்கள்.

க இஸ்திரியின்வித்தனுக்கு நித்தனுக்குமங்களம்
ஏவைவினையுத்தனுக்குச் சித்தனுக்குமங்களம்
சத்துருசங்காரனுக்குச் சருவமெய்வீரனுக்கு
பத்தருபகாரனுக்குப் பரமகுமாரனுக்கு— சீரேசு

உ சற்பதலைநூறனுக்குப் பேறனுக்குமங்களம்
தன்குதிபற்பீறனுக்கு வீறனுக்குமங்களம்
அற்புதகுணாலனுக்கு அதிசயபாலனுக் குப்
பொற்புறுசெங்கோலனுக்குப் புளைதலைநூலனுக்கு–சீரே.

ங ஏதேனைமீண்டவர்க்கு ஆண்டவர்க்குமங்களம்
எங்களருள்நீண்டவர்க்கு மாண்டவர்க்குமங்களம்
மாதேவைபுத்திரர்க்கு மாறுதமித்திரர்க்கு
தீதேருவஸ்திரர்க்கு செகவெல்லுமஸ்திரர்க்கு— சீரேசு

ச லோகைவென்றதூயனுக்கு சேயனுக்குமங்களம்
லோகமனுநேயனுக்கு நாயனுக்குமங்களம்
சோகைவென்றசித்தனுக்கு சுரர்தொழுகர்த்தனுக்கு
யோகமறுசத்தனுக்கு நோவகற்றிரத்தனுக்கு — சீரேசு

௰உ. கிழவன் இயேசுவோடு சம்பாஷித்தல்.

விருத்தம்.

பொய்களின் றகப்பன்தானோர் பொய்யெடுத் துரைக்கும்போது,
தொய்குறி யெதுமிலாது சொந்தமேயெடுத்துச் சொல்வான்;
மெய்களின் சுரூபியேசு வேந்துமுன் கிழவன்ரூபில்
செய்குணம் அறியான்போல தேற்றுவான் சாற்றுவானே

இராகம், நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

பல்லவி.

ஏதய்யாஸ்வாமி? இங்கேவந்த
தேதய்யாஸ்வாமி!

அநுபல்லவி.

ஏதய்யாஸ்வாமிஇப் பாதைஇலாதமா
வேதனைக்காட்டினி லேதனியேநிற்ப— தேதய்யா.

சரணங்கள்.

க வேட்டைக்காரர்ஓட்டை ஓட்டும்பயணிகள்
கூட்டமில்லாமலிக் காட்டில்வரார்வரில்,
எட்டிக்குப்பூட்டியி லாட்டிமறவர்கள்
வீட்டுவரேமனக் கோட்டமிலாமலே— ஏதய்யா.

உ சாற்றும்யோர்தானெனும் ஆற்றங்கரையிலே,
நோற்றயோவானுனே போற்றினனே, பரன்
தேற்றினனேதமக் கேற்றசுதனென
வேற்றுமைநீயிங்கு தோற்றியதெப்படி?— ஏதய்யா

௩ எங்கள்கூட்டாளிக ளிங்குவனந்தனில்
தங்கித்திரிவது பங்கதுவாகிலும்,
உங்களிடத்திலும் அங்கொருவேளையில்
உள்ளசாமான்களைக் கொள்ளவருவமே— ஏதய்யா.

௪ அன்றைக்குநானங்கு சென்றசமையத்தில்
உன்றனைக்கண்டுவான் நின்றெழுகாட்சியை
நன்றுறக்கேட்டது என்றைக்கும்ஞாபகம்;
இன்றிங்குவந்ததே தென்றெனக்கோதுவாய்—ஏதய்யா

௰௩. தேவகுமாரன் பதில் உரைத்தல்.

வசனம்.

என்னை இங்கே கொண்டுவந்தவர் இதைவிட்டு அப்புறம் நடத்திக்கொண்டுபோவார். இன்னொரு வழிகாட்டி எனக்கு அவசரம் இல்லை என்றார்.

௰௪. கிழவன் சம்பாஷணை தொடுத்தல்.

விருத்தம்.

இங்கென்னை நடத்திவந்த என்பிதா தாமேமீண்டும்
பங்கமி லாதுதப்பப் பண்ணுவ ரென்றாரேசும்;
அங்கது கேட்டபோது அதிசய முற்றோன்போல
கங்குலி னுடையான்பொய்யைக் கட்டினான் கொட்டினானே.

இராகம், சங்கராபரணம்,   ஏகதாளம்.

பல்லவி.

அற்புதமே! பொற்பிலகும் சற்புதல்வனே!
அடிக்கரும்பே! கடைப்பிரம்பே அதிமுதல்வனே!

சரணங்கள்.

க இப்பெரிய காட்டில்வந்தால் எப்படிநீர்தான்
இடத்தைவிட்டு வெளிப்படுவீர் திடத்துடனேகாண் ?–

உ அற்புதஞ்செய் யாமலிதைத் தப்பவேமாட்டீர்
ஆண்டவனார் மகனுமக்கு யாண்டுமிடமே— அற்பு.

௩ ஐயாநீர் இங்குவந்த அதிசயமேது
ஆரணியத் தேதியங்க காரணமேது?— அற்பு.

௪ சருவபரன் உன்றகப்பன் ஒருமகனீரே
தாரணிக்குப் படியளக்கும் பூரணனீரே!— அற்பு.

௫ வான்புவிக்குப் புகலளிப்போன் தான்புசியாமல்
வறியனைப்போல் பசித்திருக்கு முறையீதென்னவோ!

௬ உலகமெலாம் இருந்தாலும் உன்பிதாவுக்கு
உன்போலே கிடைப்பதில்லை பின்பிறருவர்காண் — அற்பு.

௭ எல்லாமும் அழிவுறினும் செல்லிடகன்னீர்
இருந்திடுகில் கடவுளர்க்கு மருந்[illegible] — அற்பு.

௮ நெருப்பினில்வாள் நுனியதிலும் சருப்பமதிலும்
நெட்டூர நோயினிலும் கெட்டதேபசி— அற்பு.

௯ வனவாசி எங்கள்கையில் வஸ்துகளேதும்
வைத்திருந்தா லோதருவோம் உத்தமமீது— அறபு.

௰ காய்கிழங்கு கையிலில்லை வாய்பதறுதெம்
கக்கசத்தைச் சொல்லுதற்கு வெட்கமிகுது— அற்பு.

௰௧ தண்ணீருமெங்களுக்கு வெண்ணெயளவே [போம்.
சலத்தைக்கண்டால் ஒட்டகைபோல் பெலத்துக்குடிப்

௰௨ ஆனாலும்பயமென்ன வானபரனார்
அதிசயக்குமாரனுமக் கெதுவுமியலும்— அற்பு.

௰௩ வல்லபரன் மகனீரிக் கல்லையப்பமாய்
மாற்றியுண்டும் ஆற்றுமத்தைக் காத்திடுவீரே— அற்பு.

௰௫. கிழவனை இயேசு அறிந்து வெளியிட்டது.

விருத்தம்.

முன்னமே சதியைஆய்ந்து முகஸ்துதி யுடனேசாத்தன்
சொன்னதைக் கிறிஸ்துநாதன் துல்லிப மனதிற்கொண்டார்;
அன்னதால் கிழவன்வேஷத் தந்தர மயலைநோக்கி,
என்னவாய்த் துணிந்தாய்பேயே எத்தனே யெனச்சொன்னாரே.

இராகம், துசாவந்தி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னபுத்தி நினைந்தாயடா! பழையபாம்பே!
எதுவேஷம் புனைந்தாயடா!

அநுபல்லவி.

உன்னுடைய வேஷமெல்லாம்
உள்ளிலும் புறம்புஞ்சென்று,
நின்னையறிவேனே நீயென்
றன்னையும் அறிவதுபோல்— என்னபுத்தி

சரணங்கள்.

க அப்பத்தின் வலியில்தானோ? மனுவுயிர்கள்
செப்பத்திற் றரித்தல் ஏனோ?
தற்பரன் புகலுவானோ? யாதொருவார்த்தை
நிற்பதுயிர் அத்தில்லீனோ?
முப்பத்தைந்தாண்டோடேயைந்து
முந்தகால் முன்னோர்க்குவந்து,
ஒப்பத்தில் மன்னாவைத்தந்து
ஓம்பின நிசமறிந்து— என்னபுத்தி.

உ மோசையின் கதைக்குவாராய், வனாந்தரந்தீ
மூடிய மலையை ஓராய்,
போசனபானமோ தேராய், நாற்பதுநாளோர்
பொருளேனுங் கொண்டானோபாராய்,
ஈசனார்திருவசனம்
எவ்வுயிர்க்குமசனம்,
யோசனை வேறேவிசனம்!
நாசமுன் வாயேபிசினம்!— என்னபுத்தி.

ங முன்னொருகால் இந்தக்காட்டில், நாற்பதுநாளாய்
முனிவெலியா வுந்தன்பாட்டில்,
பன்னுதல்பார் வேதவேட்டில், திரிந்தபோது
பட்சணங்கொண்டானோ கூட்டில்;
அன்னவை அறிந்தபேயே,
அவிசுவாசத்திற்கு நீயே,
என்னையுமிழுக்கச் சீயே!
எப்படி துணிந்தைநாயே!— என்னபுத்தி.

௰௬. சாத்தான் போக்குப் புளுகுதல்.

விருத்தம்.

பூனைதன் கண்ணைமூடி புக்கெனப் பாலையுண்ணப்
பானையிற் றலையிட்டாக்காற் பார்ப்பவர் குருடராமோ?
ஆனையின் புளுகன்சொல்லின் ஆழமும் நீளம்யாவும்
மோனையோ டியேசுநூவ மொழிகுவான் புளுகன்பேயே.

இராகம், செஞ்சுருட்டி. பிலந்திதாளம்.

பல்லவி.

மதியும்அழிந்து கதியும்இழந்த
வறியஆஷியான் ஐயா!

அனுபல்லவி.

விதியற்றவனுக்கெது வுற்றுமது
விருதாஎன்பது பொய்யா?— மதியும்.

சரணங்கள்.

௧ தலைவன்யானும் கலகமாடினோம்
அலகைக்கணமெல்லாரும்,
உலைவிலாயதெம் மாதியோக்கியம்
உற்றசகலசீரும்— மதியும்.

௨ கதியையிழந்து குழியில்விழுந்தோம்
கரையிலாதநெருப்பு!
அதையுங்கடந்து சிலபலதரம்
அவனியிலும்சஞ்சரிப்பு— மதியும்.

௩ ஆகாயத்திலும் வாகாகத்திரிந்
ததிலுமாளுகைசெய்வோம்!
நாகாதிபர லோகமத்தியும்
நடந்துலாவிநைவோம்— மதியும்.

௪ தேவபுத்திரர் சபைநடுவிலும்
திரியவுங்கூடும்தானே!
யோபின்உத்தம மகத்துவத்தினை
எடுத்துக்காட்டினேன்நானே— மதியும்.

௫ ராமோத்தூரினி லாகாப்புவிழ
யானேபோவனென்றெடுத்தேன்
ஆமாகாப்புடை தீர்க்கர்வாய்களில்
அபத்தவார்த்தை கொடுத்தேன்— மதியும்.

௬ தப்பிதஞ்செய்து குப்புறவிழுந்த
தரித்திரன்நான் ஆனாலும்,
கற்பனைபோலே சற்பனைசெய்யக்
காத்திருக்கிறேன்மேலும்— மதியும்.

௭ பெற்றபேறு உச்சிதங்களை
பெருகஇழந்தபாவி,
மற்றும்அறத்தை நலத்தைக்கண்டிடில்
வணங்கிக்கொள்ளுவன்மேவி— மதியும்.

௮ தேவபுத்திரன் உன்னைக்கண்ட இச்
சிறப்பெனக்குக்கொண்டாட்டம்!
நாவின்ஞானம் உனதுதிவ்ய
நவினமெனக்குநாட்டம்!— மதியும்.

௯ இத்தரையவர் சத்தருவென்
றென்னைமனம்வெறுப்பார்,
உத்தமத்துடன் இத்தைஆய்ந்திடில்
உலகில்என்னைப்பொறுப்பார்— மதியும்.

௰ மைந்தராலெனக் கெந்தநஷ்டியும்
வந்ததில்லையெந்நாளும்,
தந்திரத்தினால் எந்தனக்குறும்
மைந்தருதவிநீளும்— மதியும்.

௰௧ சத்துருவாகிலும் முற்றத்தயலே
தள்ளுதல்மதியீனம்,
வித்தகமாகயான் தத்திரவேளையில்
விடுப்பனேபலஞானம்— மதியும்.

௰௨ அட்டகருமத்தி னாலேமாந்தர்க்
கெட்டிடாததூரம்,
கிட்டத்தட்ட தெரியக்காட்டி
விட்டிடுவேனோர்நேரம்— மதியும்.

௰௩ விழுந்தமாந்தர் எழுந்திருப்பது
மெத்தவுமவர்சலாக்கியம்!
அழுந்திநரகில் அநந்தகால
அவதியெங்கள்நிற்பாக்கியம்!— மதியும்.

௰எ. தேவபுத்திரன் சாததனை அதட்டுதல்.

விருத்தம்.

ஆதியோ டந்தமாக அனைத்தையு மறுகதயேசு
நாதன்முன் அசுத்தவாயன் நரிநிகர் புளுகினாலும்,
பாதகன் கபட்டுவாக்கால் பரிசுத்த மனதுநொந்தே
ஏதடா முழுப்பொய்ப்பேயே இந்தவீச் சென்றாராமே.

இராகம், சாவேரி. ஆதிதாளம்.

பல்லவி.

ஏதடாமுழுப்பொய்ப்பசாசே! இவ்வீச்சேன்!
இத்தனைவீண்பேச்சேன்!

அநுபல்லவி.

ஆதிமுதலேபொய்யை ஓதலுன்றொழிலாச்சே
அதுவேயல்லாமலுனக் கேதுபொருள்சேச்சே !–ஏதடா

சரணங்கள்.

௧ நரகத்தைவிட்டுலாவி நடப்பேனென்றாயே,
நல்வீடுமோக்கத்திடை செல்வையோநீயே?
பரகதிவாழ்விலேதும் பங்குண்டோநாயே?
படும்பாடதையெண்ணாத இடும்பென்னசீயே !— ஏதடா

௨ ஆகாதபாம்பேயுன்றன் அருவருப்பாலே
ஐயனுக்கூழியம்நீ செய்வதெக்காலே?
சோகேநீபயத்தினால் துடுக்காசைபோலே
துன்பஞ்செய்வதைஏவ லென்பதுதோலே!— ஏதடா

௩ யோபுக்குநீசெய்தாயோ யாவுகாரம்?
நொறுக்கினானேயவனுன் முறுக்கின்அகோரம்;
மேவியவன்பொறுக்கப் பாவிஉன்வீரம்
மெட்டுக்கொலையநீபின் னிட்டாயேதூரம்— ஏதடா

௪ நானூறுவாயில்பொய்யின் சூனியமிட்டாய்,
நாளுமுனக்கூண்பொய்யே நீளும்நீகெட்டாய்,
ஏனீமனுக்குஞான மெப்படிதுட்டாய்?
இல்லாதபொய்யைச்சொல்லி யல்லோநீவிட்டாய்?-ஏதடா

௫ முற்றுமுன்சொல்லைநம்பி கற்றறிமூடர்
முறையேகுறிகேட்பவர் அறமுழுக்கேடர்,
ஒற்றைரெட்டைவைப்பாரே சிற்றறிச்சேடர்,
ஒன்றுக்குநூறுபொய் யன்றோவீண்மாடர்!— ஏதடா

௰அ. சாத்தான் மழுப்புதல்.

விருத்தம்.

கர்த்தனார் சொன்னவாக்கில் கடுங்குத்துக் கொண்டசாத்தன்
அத்தனை துயரம்யாவும் அகந்தனில் மறைத்து மீள,
சத்துருக் கணையைவேறோர் தருணத்தில் செலுத்த வுன்னி,
சித்தமா யிரங்குமென்று செப்புவான் ஒப்புவானே.

இராகம், பைரவி. திரிசுரதாளம்.

பல்லவி.

சித்தமிரங்கிப் பொறுக்கவேண்டும்,
தேவபாலனே! அநு தாபசீலனே!

சரணங்கள்.

௧ மெத்தக்கடினமாகப்பேச
வெறியன்நானையா, மகா வறியனேஐயா— சித்த.

௨ அக்கிரமக் காரனென்றால்
அடிமைஎன்செய்வேன்? நான் கொடியவஞ்சன்!—சித்த.

௩ துஷ்டநெஞ்சில் கெட்டசெய்கை
சொந்தமேஐயா, சதா னந்தமேஐயா— சித்த.

௪ சத்தியத்தின் உத்தமத்தை
சகிக்கமாட்டிலேன், நீர் வகிக்கமாட்டிலேன்— சித்த.

௫ வஞ்சமெனது நெஞ்சிற்கேற்ற
மார்க்கமேஐயா, அது ஏற்குமேஐயா— சித்த.

௬ அடிமைகூறு மொருமன்றாட்டை
அல்லவென்பையோ? மா நல்லஅன்பனே— சித்த.

௭ சுத்தஆலயத்தில் மெத்த
சூதுவஞ்சகர், செபம் ஓதிக்கெஞ்சுவார்— சித்த.

அ வேதிகைபூ சாரிமார்கள்
ஓதுவார்களே, மனக் கோதுளோர்களே— சித்த.

கூ பீலேயாமின் மேலிறங்கிப்
பேசவில்லையோ, உல் லாசவல்லவி— சித்த.

ய பின்னுமேழை நின்னைக்கண்டு
பேசநீஜயா! இவ் ஆசைஈஜயா!— சித்த.

—— ❧ ——

யகூ. இயேசுவின் உத்தாரம்.

கலித்துறை.

இன்னொருகாலை யுமதிடம்பேச விடந்தருவீ
ரென்னவுமேசு நெறித்தமுகத்துட னிஃதறிவேன்;
நின்னைவரவென்றோ வாராதிருக்கவோ நீதிசொலேன்
அன்னதுவான விடைபோல செய்யென் றறைந்தனரே.

—— ❧ ——

உய. சாத்தான் மறைதல்.

கலித்துறை.

இப்படிச்சொல்லி முடியுமுன்பேயு மிருதயத்திற்
செப்பமுளோனெனத் தன்சிரந்தாழ்ந்து செணப்பொழுதி
லப்புறமெல்லிய ஆகாயத்தூடே யடர்ந்திருண்ட
குப்பமயலின் கிரகத்திற்புக்கிக் குரங்கினனே.

—— ❧ ——

உக. பரீட்சாதிகாண்டமுடிவு.

கலித்துறை.

துக்கச்சிறக ரிருட்டோடிவந்ததிற், சூழடவி
மிக்கவிருமடங் கந்தர மாக வெருட்டவுமே,
புக்கிமறைந்தன பட்சிகள்பஞ்சரம் பொச்சையிடைத்
தெற்குவடக்குத் திசைதொறும்ராசி திரிந்தனவே.

இரண்டாவது:

அர்த்தபாண காண்டம்.

க. இயேசுவைக் காணாமல் சீஷர் புலம்பல்.

விருத்தம்.

துய்யநதி யோர்தனிலே தீட்சைபெற்று
  சுந்தரவா னத்திருந்து பிறந்த வாக்கில்,
செய்யகரி சிபதியின் மகனேயென்று
  செயமாக வேதொனிக்க மகிழ்ந்துகேட்டு,
மையஅடி பெயர்ந்தேசு மறைய சீடர்
  பார்த்திருந்து மீண்டுவரக் காணு தாலே,
ஐயன்வரக் காணாத தென்னேயென்றே
  அழுகின்றார் அழுதழுது விழுகின்றாரே.

இராகம், மத்தியமாவதி. (திபதை.) ஆதிதாளம்.

கண்ணிகள்.

க அரசேயெங்கள் சிரசேயெம
  தையனேஎங்கு நடந்தாய்?
உரைசேரும் விண்ணவரோடுநீ
  உறவாகவோ தொடர்ந்தாய்?

௨ மறையேவேத நிறையேபுவி
  வரவேண்டிய பொருளே!
குறையேகாட்சி கொடுத்தாய்பின்னும்
  மறைவாகினை அருளே!

௩ சத்தியஆகம நித்தியபோதனே
  கர்த்தன்நீயெனச் சிறந்தாய்!
முத்தமேமகிழ் மெத்தவாயினம்
  சுத்தமேஎமை மறந்தாய்!

௪ தீர்க்கருரை வாக்குமுறை
  சிறந்தாயெனக் கொண்டோம்,
பார்க்குமுனர் நீக்கமுற
  ஏக்கம்பெறக் கண்டோம்.

ரு காணாதது கண்டோமெனக்
களிமீறினம் ஐயோ,
தோணாதது மெய்போலவே
தோன்றியது பொய்யோ?

சு சீலமோசை நின்றாலேமாமலே
மேலேயேறினன் முன்னே,
கால நீயுமக் கோலமேவிலெம்
மாலென் செய்யலாமன்னே?

எ நவியாமுனி எலியாபரன்
வலிமேவி முன்றாலே,
ஒலியோடுமா சொலியாஅழல்
உயர்ந்தேகினன்மேலே.

அ எண்ணமீறுதே அண்ணல்நீரேயிங்
கெய்திடிவிந்த நேரம்,
புண்ணியவாறுமைக் கண்ணில்காணவே
போமே எம்விசாரம்.

உ. சீஷர் இயேசுவைத் தேடுதல்.

விருத்தம்.

மோதிவிழுந் தலறியவர் தேறிக்கொண்டு,
முற்காலம் எலியாவா னேறிப்போன
போதவனை வாலிபராந் திர்க்கர்சேர்ந்து
புறப்பட்டே நாளும்வரைத் தேடினாற்போல்,
காதல்மிக நதியோர்தான் கரையைச்சேர்ந்த
கண்டகண்ட தலங்களெல்லா மொழுங்கேசுற்றி,
நாதர்கிறிஸ் தேகவின்மே லன்பாய்ச்சீடர்
நாடினார் இடங்களெங்கும் தேடினாரே.

இராகம், தோடி. (தரு.) அடதாளசாப்பு.

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தாரே தூய்ய
ஜேசுதனைச் சீடன்மாரே!

அநுபல்லவி.

ஆடிப்பறக்கின்ற பட்சிகள்போலவே,
அலங்கைக்கொத்தளந்தங்கும்
தலங்கள்பட்டணமெங்கும்— தேடி.

சரணங்கள்.

௧ முன்னொருகாலத்தில் யோசுவாஎன்பவன்,
முதுமொழி வாசகத்தின்படி,
பன்னிருகோத்திர யூதரைத்தீர்த்திகை
பகருமியோருதா னென்படி,
சொன்னமலியுங்கானானிற் செலுத்திய
துறையைஅடுத்ததின் முன்படி;
துன்னும்பெத்தாபரா வென்னும்ஒற்றாழியன்
சுப்பிரதீபங்கொ ளின்படி,
பென்னம்பெரிய சவக்கடல்வேலையும்,
பெட்புறமக்கள் நடக்கின்றசாலையும்,
இன்னுமநேக மரங்களின்சோலையும்,
இருடிகள்தங்கிச் செபிக்கின்றமூலையும்,
இடுக்குகளு, மிருட் டொடுக்குகளும், வேலி
அடுக்குகளும், மூலை முடுக்குகளும், ஆய்ந்து— தேடி.

௨ மலைநிகராகிய எரிகோனூரதின்
மாடமுங் கூடமும் திரைகளும்,
பலபலபுரவியின் வெள்ளமும்பள்ளமும்
பாதாளமோடும் புரைகளும்,
கொலைசெய்யும்நாகங்கள் கிடைகளும்நடைகளும்
கொங்குயிர்க்குந்தரு நிரைகளும்,
நலமெலிசாவெனுந் தீர்க்கனுப்பிட்டிட
நஞ்சிழந்தகேணிக் கரைகளும்,
அலைநிகர்வாலிபர் ஆடலின்வீடுகள்,
அலங்காரனாய ஸ்தல மெனுங்கோடுகள்,
தலையெடுப்பாக உயர்ந்திடுமேடுகள்,
சத்துருநெஞ்சத் தராபியர்காடுகள்,
தடத்திலு, முனிவர்கள் மடத்திலும், சிலசில
கடத்திலும், பலபல இடத்திலும், போய்ஆய்ந்து—தேடி.

௩ எந்நாளுமன்னர் புகழும்எருசலை
இரற்றினம்பதிந்தகொட் டகைகளும்,
பொன்னாரமணிமார்பன் பிரதானாசாரியன்
புகழ்பெற்றுறைய்மா ளிகைகளும்,
மின்னோ, விண்ணோ, என்னோ என்னவிளங்கிய
மேலானஆலய வகைகளும்,
மைந்நீர்மைகொண்ட அயினோன்கிராமத்து
வளமிகுநீர்நிலைத் தொகைகளும்,

முன்னேமக்கேருசின் கோட்டை யடிகளும்,
மூப்பர்ஆசாரியர் கூடும்சா வடிகளும்,
அன்னமண்டோதக வாசற் படிகளும்,
அப்புறம்பேரேயா நாட்டுக் குடிகளும்,
அங்குமிங்குமோடி எங்குமெங்கும்தேடி
நொங்குநொங்காய்வாடி பங்குபங்காய்நீடி— ம்தேடி.

——»❦«——

௬. இயேசுவைக் காணாததால் சீஷர் இரங்குதல்.

விருத்தம்.

மாதவனைத் தேடியவர் தமைக்காணமல்
மழையிலேமேல் நீர்போல மனதேஆடி,
பேதுளராய் யோர்தன்நதிக் கலாயில்வாயு
பேரடம்புக் கோரைநடுக் குடிலிற்சீடர்
வேதனையோ டேதிரும்பிக் கனத்தசெல்வ
மெய்ப்பொருளைப் பறிகொடுத்த விதம்போலேங்கி,
தாதைகர மிழந்ததெருச் சிறுவர்போலே
தபிக்கின்ற ரேபரனைச் செபிக்கின்றாரே.

இராகம், காம்போதி. *(திபதை.)* *ஆதிதாளம்.*

கண்ணிகள்.

க *அந்தோமகாபெரிய விந்தைநம்பிக்கைஉற்றோம்*
அனைத்துமின்போல்மறையல் ஆச்சோ!
முந்தாகமப்பொருளை இந்தாகண்டோமென்சொல்லி
முடியுமுன்னேவிலகிப் போச்சோ!

உ *எத்தனையுகங்களாய் எந்தைகள்காத்திருந்தார்*
இன்றியாம்கண்டதுமெய் வேதமே!
சத்தியமெய்க்கிருபை தாமவர்ஞானமிக
சாற்றயாங்கேட்டதுவி நோதமே!

௩ *ராச்சியத்தைஇஸர வேலர்க்குத்திரும்பவும்*
நாட்டத்துடன்அளிக்கும் காலமே
பாச்சலுடன்விளைந்து பழுத்ததென்றுமகிழ்ந்தோம்
பறந்துபோனதுமாயக் கோலமே!

ச இத்தனைதுரிதமாய் எங்கேமறைந்துகொண்டார்
   ஏதோஆபத்துவரல் ஆகுமோ?
மெத்தச்சிறிதுநேரம் சுத்தன்அவனைக்கண்டோம்
   வெறியர்கலியதனுல் போகுமோ!

ரு ஐயாஇஸரவேலின் தேவேஉம்மேசியாவை
   அனுப்பிஅன்பாயெமைக்கண் பாருமே!
வையகத்தரசரால் வாதைஉம்பிள்ளைகட்கு
   வந்தெம்இடுக்கண்களைத் தீருமே!

சா மெத்தப்பெருமைகொண்டு வீம்புமிகப்பாராட்டி
   வெம்பினுர்பயமும்மேல் இல்லையே!
கத்துமுந்தாசனாமா கனத்தயுகத்திருந்து
   கழற்றிரட்சிக்காவிடில் தொல்லையே!

—— ❧ ——

சா. சீஷர் தங்களைத் தேற்றிக்கொள்ளுதல்

விருத்தம்.

தொல்லையென மறுகிகண்ணீர் சிந்தினும்
   துய்யவனைக் கண்ணுரக் கண்டோமேலும்,
எல்லவரு முன்பாக இவரேஎன்று
   இஸ்நாபகனு மெமக்குரிய சாட்சிசொன்னுன்,
ஒல்லையினில் மறைவான மகிபன்லோகம்
   ஓட்டாரம் பண்ணுமல் வருவார்திட்டம்;
அல்லலில்லை பரன்செயனுக் கமைவோமென்றே
   ஆறினுர் சீடர்மனந் தேறினுரே.

—— ❧ ——

ரு. கன்னிமரியாள் தனியே புலம்பல்.

விருத்தம்.

ஞானமுழுக் கடையதற்காய் யோர்தான்சென்ற
   நரர்யாரும் சேமமுறத் திரும்பக்கண்டும்,
வானசுதன் ஏசுவரக் காணுதாலும்
   மகன்செய்தி யாரெனினும் உரையாதாலும்,
மானமலை கடல்மனது கிருபைஇவில்
   மாதரசி என்னுமவர் அன்னைமேரி,
கானகத்தி லிளங்குழந்தை நிகராயேங்கிக்
   கதறுவாள் வாய்மனது பதறுவாளே!

இராகம், ஆநந்தபைரவி. (திபதை.) ஆதிதாளம்.

கண்ணிகள்.

க தேவபாலனைப் பெற்றபேறிதோ
தெய்வமேஎன்ன செய்குவேன்!
பூவிற்பெண்கள்மேல் ஆசீர்வாதமிதோ!
பூவைஎங்ஙனம் உய்குவேன்!

உ இந்தமாமீதொரு பெண்ணுக்குமில்லாத
இதயம்பூரித் தெழுந்தேனே!
சந்தோஷம்போயொரு பெண்ணறியாதுக்க
சமுத்திரத்தில் விழுந்தேனே!

ஙு தொட்டிலிலேபசுக் கொட்டிலன்றிசெல்லத்
துரையைநான் பெற்றபோதே!
தட்டழிந்தோடினேமே எகிப்பத்துக்கு
சதிதேடினானேரோதே!

ச மன்னர்மனையெனும் பெத்தலேயைவிட்டு
மறைந்தோம் நாசரேத்தூரே!
இன்னும்கிரீட பதிகளுக்கேதுண்டோ!
என்மகன் மேலெதும்போரே!

ரு வல்லமறிஎன்று சாட்சியிட்டானும்
வனத்திற் றாதன்யோவானே!
நல்லகாலம் இனித்துன்பமில்லைஎன்று
நானும் மகிழ்திருந்தேனே!

சு உள்ளத்தினூடொரு கத்திஉருவுமென்
றோதினன் சீமோன்முன்னே!
விள்ளக்கூடாத துயரத்தினால்மனம்
வேகிறேன் இதோமன்னே!

எ பன்னிரண்டு பிராயத்தில்தப்பியும்
பரமபிதாவின் வேலை,
நன்னயமென்றொரு சேலையின்ஆலயம்
நாடினனே முற்காலே!

அ தந்தையன்சோலியில் இந்தமுறையிலும்
தங்கியிருப்பார் எங்கண்ணே;
சிந்தைகலங்கி வதங்கியிருப்பது
தெய்வபத்தியல்ல பெண்ணே!

௯. சாத்தான் பேய்களிடம் சேர்ந்து முதலாம் சோதனையின் அபஜெயத்தை அறிவித்தல்.

விருத்தம்.

காரிருட் பிரபுசாத்தன் காலிலி வாகனத்தான்
சோரமாய் முதலில்வைத்த சூதனு கூலம்இன்றி,
மாரியி னாடேபேய்கள் வதிகின்ற தலத்தைச்சேர்ந்து,
வீரியமி ழந்தசெய்தி விளம்புவான் தளம்புவானே.

இராகம், பிலஹரி. (நிபதை.) செம்படைதாளம்.

கண்ணிகள்.

௧ ஐயோபிரபுகளே! துய்யோன்முதற்பிள்ளைகாள்!
வெய்யஆகாயம்ஆட்சி செய்யும்க்ரீடாதிகளே!

௨ நீரோசலம்நெருப்போ பாரோவிண்ணோஅனைத்தும்,
தாரா தெமைத்துரத்த வீரன்கிறிஸ்துவந்தான்!

௩ எம்மைஅரசகற்றி வெம்மைநரகமிழ்த்த
தம்மைநிகரிலாத செம்மல்கிறிஸ்துவந்தான்!

௪ கண்டன்அவனோமகா வண்டன்முதலாதாமும்
மிண்டனிவனுக்கொரு சுண்டுவிரலுக்கில்லை!

௫ மாதால்அல்லாதுமுந்த ஆதாம்நிலைபெயரான்
நாதன்கிறிஸ்துக்கொரு போதுமீடாகான்ஆதம்!

௬ பெண்ணிற்பிறந்துமுயர் விண்ணேயிவன்ஜெனனம்!
மண்ணோர்க்கிலாவரங்கள் திண்ணமுறுமிவனில்!

௭ ஆதாமுக்கிட்டவலை போதாதிவற்கிடமுன்
சோதனைவாய்க்காமலிப் போதுதிரும்பிவந்தேன்!

௮ முன்னேயேதேனிலேவை மின்னைக்கெலித்தாற்போலே
இன்னுஞ்செயமென்றுநீர் உன்னுதிருக்கத்தானே!

௯ வாரும்பிரபுகளெல் லாரும்அதிசீக்கிரம்,
பாருமிவனுக்கிடத் தேருமேதோருபாயம்!

௰ கையாற்கருவியாலோ பொய்யும்விநோதத்தாலோ,
ஐயோஎல்லாருந்துணை செய்யவிழித்திருங்கள்!

எ. இயேசுவைப் பெண்களால் அகப் படுத்த பேலியாள் சாத்தானுக்கு ஆலோசனை கூறல்.

விருத்தம்.

எல்லாரும் அப்பொழுதே மீசைதட்டி
இயன்றளவு செய்திடுவோம் இறையேநீதான்,
சொல்லுகின்ற படிநடப்போம் என்றேயோத;
துர்மோக மதுநிறைந்த பேலியாளோ,
நில்லுநிலும் பூதகணத் தரசேஇந்த
நிபுணகிறிஸ் தேசுவினைச் சுளுவிலேநீ
வெல்லுதற்குத் தகும்வழியொன் றுண்டென்றேநீ
வினைசெய்தான் மந்த்ராலோ சனைசெய்தானே.

இராகம்; சுருட்டி. (தரு.) அடதாளசாப்பு.

பல்லவி.

சிக்கவேண்டும் பெண்கள்மூலம், பெண்களைவிட்டால்,
ஜெகத்திலுண்டோ மறுசாலம்!

அனுபல்லவி.

செக்கச் சிவந்தபெண்கள் திகழு மின் போலேகண்கள்;
மிக்க மலர் முகங்கள் வெல்லு மிப்புவி விண்கள்;— சிக்க.

சரணங்கள்.

க ஒய்யாரமானநடையாள்! ஒயில்உடையாள்
ஒளியின்தங்கக்கொடி இடையாள்!
பொய்யான லீலைப்பாட்டால்,
புளுகும்அவள்நா ஆட்டால்,
ஐயோஎனும் குணுட்டால்,
அரைச்சொல் அரைக்கண்காட்டால்— சிக்க.

உ கன்னிக்குரியநாணம், என்றேஒளித்துட்
கடக்கையில்எறிவாளே பாணம்!
என்னவயிர நெஞ்சோ!
இவள்முன்எதுவும் பஞ்சோ!
பன்னகவாயின் நஞ்சோ!
பாவைமுன் இளம்பிஞ்சோ!— சிக்க.

௨ மன்னவர் மாளிகை மாடகூடத்திலும்,
வனத்திலும் சோலையின் புனத்திலும், பாசிகள்
துன்னியநீர்நிலை சோபித பள்ளங்கள்
சுந்தரமேவுப சுந்தலாவூடுமே;
சூதிலேநிற்பாய், சவுந்தர
மாதிலேஅற்பாய், கலந்துநீ,
மின்னுகலிஸ்தியாள், மேனிகிளிமனாள்,
விந்தை தமினயாள் சுந்த்ரசெமேனியாள்,
வன்ன அந்தியோபியாள், மாதமிமோனியாள்,
மங்கைச்சிரிங்சாளை யுங்கனமாதையும்,
மூட்டிவிட்டாயே, மோகக்கனை
ஆட்டிவிட்டாயே, சும்மாநின்ற
சின்னஅப்பாலேர் சிறந்தநெப்ற்றியூனையும்
செய்யூப்பித்தளை பையன்பானை; சத்தர்;
பின்னும்வானைசில்வான், என்னும்சிறுவர்பெயர்
பேசிநீமறைந்து மோசஞ்செய்தாயடா!— செல்.

௩ மைந்தர்அநேகர், மா சிந்தைஉரத்தொடு
மாதர்அழகையும், சூதுமயலையும்,
தந்திரமோடியை யுந்தயவையும்,
சமானகைமேலோர் சல்விபெறுதென,
தள்ளினார்அல்லோ, மாயம்எண
எள்ளினார்அல்லோ? நினைந்துபார்;
மூந்தப்பெல்லேயனும் மூல்லையன், கீழ்த்திசை
முக்கியப்பெண்களின் மிக்கசவுந்தர
விந்தையைக்கண்டதில் வேட்கையுறுமலே
வீசிநடந்ததை யோசனைசெய்யடா!
மேலும்நீகேளாய், மோகத்தில்எக்
காலுநீதோளாய்! கதையினில்
வந்திடும்ஆபிரி க்காவென்று மாறி
வழங்குபெயரில் முழங்கியமங்களன்,
சந்திரஉதயம்போல், வந்தமாநங்கையை
சார்ந்ததுண்டோ?மயல்சேர்ந்ததுண்டோ? போடா—செ.

௪ பொன்னொடு, சீர்த்தி, புகழதின்வாஞ்சையில்
பொங்கினசாலமோன் பெண்கள்கண்வீழ்ந்தனன்;
என்னமகத்தான சிந்தையுள்ளோர்கிறிஸ்
தேசுவைப்பெண்களால் மோசம்செய்யஎன்றே

எபபடிச்சொன்ஞய்? சிறியபுத்
  திப்படிச்சொன்ஞய்! உலகினில்,
சின்னமனத்தவர் அல்லாதமானிடர்
சிற்றின்பமாதனைச் சுற்றிவிழார்களே;
இன்னும்கிறிஸ்தை மயக்கத்தகும்பெண்கள்
எங்கேஉண்டு? தேவப் பெண்கள்வந்தாலுமே,
  ஏடிஎன்பாரே! அப்பாலோடிப்
  போடிஎன்பாரே! இதில்மிக
நன்னயமானக னத்த மகத்தந
டத்தைமனத்து செலுத்தியலாதிந்த
தன்னினிரில்லாத மன்னனைவெல்லுதல்
சற்றுங்கூடாதடா முற்றுமாகாதடா!— (மிசல்.

ய. பசியிலே இயேசு தம்மை ஆற்றிக்கொள்ளுதல்.

விருத்தம்.

நாற்பதுநாள் வனந்திரிந்தான் ஏசுநாதன்,
  நாளொரிடமாய்வனத்தி லிரவைப்போக்கி;
தாற்பரியத் துடனரர்கள் மீட்சிக்காகத்
  தாம்புரியுங் கருமவழி பலவும்ஆய்ந்தான்;
ஏற்பவொரு போசனபா னமுமில்லாமல்
  இப்படிநாற் பதுநாளும் கழிந்தபின்னர்,
மேற்படியங் கவர்பசியை உணர்ந்துதீனை
  விரும்பினர் பசிதீர விரும்பினரே.

இராகம், பைரவி. (இயால்மெட்டு.) ஆதிதாளம்.

பல்லவி.

பசிக்குதே! மிகவும்
பசிக்குதே! ஸ்வாமி!

அநுபல்லவி.

பசிக்குதேநாள் நாற்பதாக
  பட்டினிஇருந்தும், அந்நாள்
ருசிக்கமனம்இல்லை இப்போ
  நோன்பினல்பசி மீறுதே, ஸ்வாமி— பசி

சரணங்கள்.

க அன்னைமரிஇங்கிருந்தால் என்னமுந்தாராளோ? இப்போ
மன்னுகிளையோர்களேனும் வந்துதவுவாரில்லையே;— பசி.

உ காயொடு கனி கிழங்கோ, காணக்கிடைத்தால், அவற்றால்
தீயபசிஆறிடுமே, திக்கில்அவையேதுமில்லை;— பசி.

௩ தாகத்தினாலேகுடலும், வேகுதே குலைநோகுதே!
ஆகத்திலுமேபெலனி லாமல்மிகச்சோருதே, ஸ்வாமி!-பசி.

௪ காடிதைவிட்டேகடந்து வீடடையவேவிரும்பி,
தேடவென்றாலு மதற்கு திசையும்தப்பிப் போச்சுதே,ஸ்வாமி

௫ உந்தியைவருத்தபரன் வந்துணவூட்டாதிருநதால்,
எந்த வித மேனும் காப்பார் என்மலக்கம்? ஆகிலும், ஸ்வாமி!

௬ அப்பமுந் தண்ணீரதுவும் தப்பியும் பிதாவின் சித்தம்
ஒப்பமே நடத்துவதே உத்தமவுண் ஆகிலும்; ஸ்வாமி! பசி.

௰க. இரவில் இயேசு கனாக்காணல்.

கொச்சகம்

நாதன் பசிவருந்தி நாவுமிக வுலர்ந்து,
போத இளைத்தே புலம்பி மனந்தேறி;
சீத இரவுவரச் சேர்ந்தோ ரிடம்படுத்தே
ஏதமி லாதுறங்க; ஏற்றகனா கண்டனனே!

இராகம், நாட்டை. (திபதை.) சாப்புதாளம்.

கண்ணிகள்.

க சீதவனச்சோலையிலே, ஏசு
சேர்ந்துதுயில்கின்ற காலையிலே,
நாதன்கண்டார் சொற்பனமே, பசி
நாடினதேஅதன் உற்பனமே.

உ அப்பத் தொடு நீரும் கண்டார், பசிக்
கானபொருள்பல சீரும்கண்டார்;
செப்பமிவைசேரக்கண்டார்; நம்
சேசுகனாவில் கண்ணாரக்கண்டார்.

௩ கேரீத்தெனும் ஆறுகண்டார், கரைக்
கேள்வன்உறங்கிடு மாறுகண்டார்,
தூரக் காகக் கு[illegible]பம் கண்டார், அவைச்
சுண்டில்இறைச்சி[illegible]ட்[illegible]ம்[illegible]டார்.

௪ காகங்களைக் கிட்டக்கண்டார், ஆற்றம்
கரையில்அவைகள்வந் தெட்[illegible]க்[illegible]ண்டார்
வேகம் வந்துநிற்கக் கண்டார், [illegible]ா
மெல்லஅவைகளை வைக்கக்கண்டார்.

௫ வைக்க; அவை ஓடக்கண்டார், அந்த
மைந்த னெழுந்துண்டி தேடக்கண்டார்,
மிக்கபசிஆறக்கண்டார், அவை
மென்றுஅவன்களை தேறக்கண்டார்.

௬ பின்னுந்துயில்போடக் கண்டார், அவன்,
பேர்ந்தொருதூதனும் கூடக்கண்டார்;
சொன்னதூதன் தட்டக்கண்டார், தின்னு
தூங்காதே என்று தெருட்டக்கண்டார்.

௭ அப்போதவன் தான்விழித்து, புது
அப்பமும்தண்ணீரும் அங்குகண்டு,
தாப்பாமுறையே பொசித்து, மனச்
சந்தோஷத்தோடு படுக்கக்கண்டார்.

௮ இன்னும் தேவதூதன் வந்தான், தட்டி
எழுப்பிஅருந்திடச் சொல்லக்கண்டார்,
முன்னமுறை போலெழுந்தான், அவன்
முன்போலேசேர்ந்து பொசிக்கக்கண்டார்.

௯ தீர்க்கனெலியாவுடனே, தாமும்
சேர்ந்துபொசிப்பது போலக்கண்டார்
ஊக்கன் றனியேயுடனே, பருப்
புண்டதுபோலவும் கண்டனரே!

௰௮. சூத்தான் பட்டணத்தான் கோலத்தில், இயேசுமுன் தோன்றுதல்.

விருத்தம்.

இந்தமுறை இராவழிந் துதயமேடோன்
றேறியதின் சிகரமதை யடைந்தா ரேசு,
விந்தர்கிடை குடில்குறிச்சி எதும்காணமல்
விற்பனமாஞ் சோலையொன்றை அடியில்கண்டார்,
அந்தவழி யேதொடர்ந்து நடந்துபோக
அற்புதகா வொன்றுகண்டா, ரதன்பால்கோலச்
சந்தமுறும் பட்டணத்தான் அவர்முன்றோன்றி
சாற்றுவான் வெகுவசனம் ஏற்றுவானே.

இராகம், ஆநந்தபைரவி. ஏகதாளம்.

பல்லவி.

பட்டணத்தான் கோலஞ்சூடி, பசாசு வந்தான்
பார்க்க வெகு கோடி மோடி!

அநுபல்லவி.

வட்டலாத்தும் போட்டுக்கொண்டு,
மதுர வசனம் விண்டு,
இஷ்டமே உனக்குத் தொண்டு
எப்பொழுது; மென்று சுண்டுப்— பட்.

சரணங்கள்.

௧ வல்ல பரனார் குமாரா, பசியினாலே
வன்கொலைப் படுதல் சீரா?
இல்லவன் முறையில் ஆச்சோ
இறைவன் திறமும் போச்சோ?
செல்லராச வீரவல்லி!
செய்தியென்ன? என்று சொல்வி— பட்.

௨ சக்களத்தி பெற்ற பிள்ளை, பசியினாலே
சாகவில்லை; நீயோ கொள்ளை?
முக்கிய அநாதி பாலா!
முழுதும் பிதாப்போற் சீலா!
தக்கதோ? இதென்ன சேதி!
சாவையோ? பசித்தென் றோதி— பட்.

௬ வானத்து மன்ஞ முன் பெய்ய, யாக்கோபின் மக்கள்
வருடமோ ரெண்ணைந்து முய்ய!
தானத்தில் குறைபட் டாயோ?
தத்துவீந் தனை விட்டாயோ?
மானத்தைக் காப்பது பொய்யோ?
மறுக்க மென்ருன் பேய் ஐயோ!— பட்.

௰௩. இயேசு பதிலுரைத்தல்.

வ ச ன ம்.

பேயே! கேள். அவர்கள் அனைவருக்கும் அகத்தியம் இருந்தபடியே உதவி கிட்டிற்று. எனக்கோ! போசனம் இல்லாமலும் காரியமாகும். பின்னை இந்தப்படி பிலுக்கும் குலுக்கும் என்? என்ருர்.

௰௪. பேய் வசனித்தல்.

ஐயா பொறும்! உமக்குப் போசனம் அவசரம் இல்லை என்றுப்போல் பேசுகிறீரே! உமக்குப் பசிக்க இல்லையா? இப்போ தங்கள் முன்னே சாதம் வைக்கிறதாஞல், உண்கிறதோ, இல்லையோ? சொல்லவும் என்ருன்.

௰௫. இயேசுவின் மறுமொழி.

அது தருகிறவர் குணம்போலே, என் மனம்போலே என்ருர்.

௰௬. சாத்தான் இயேசுவைச் சாப்பிட வேண்டல்.

கொச்சகம்.

எப்படியு மேபுசிக்க* இந்தமனுப் பாலனையான்
*செப்பி யிழுத்திடுவேன் தின்னவைப்பேன் என்றுசொல்லி,
அப்பாவி போலே அருமை முகங்காட்டி
தப்பா தருந்துமென்று சாத்தனுரை சாற்றினனே.

இராகம், சௌராஷ்டிரம். ஏகதாளம்.

பல்லவி.

ஏன் ஐயா மறுக்கவேணும்,
பானம் ஊண் ஒறுக்கவேணும்?

அநுபல்லவி.

வானமும் பூமியும்உன், தானமேஐயா!
வாவென்றால் வருமனைத்தும்! சாவது மாவருத்தம்!— ஏன்.

சரணங்கள்.

௧ சிஷ்டிகள் உன்னை உடனே, சேர்ந்துதவுதல் கடனே!
சுட்டில் இப்போது வந்து, தோத்திரம்ஓதி, [கும்-ஏன்.
சுறுக்கினில் ஊண் படைக்கும், மறுக்கிலோ உயிரடைக்

௨ மோசை முனி விலக்கிவைக்கும், போசனத்திலே புசிக்
ஆசை வேண்டாம் புசித்தற், கானவை உண்டே! [கும்
ஐயன் நீ பசியிருக்க, நையுதென் மனம் பெருக்க— ஏன்.

௩ விக்கிரக தின்அசனம், உட்கொளலு மாவிசனம்!
முக்கியன் தானியேலும், முடுகினன் முன்னே!
முத்திஅரசே புசியும்! சுத்தமுள்ள வைருசியும்— ஏன்.

௪ பூதலத்துட் சுவைகளுற்ற, சாதமொடு கறியு மற்ற
ஏதுண்டோ வலியவந்திங் கிருக்குதே, இதோ!
ஆதலால் நீரெழுந்திப், போதுணுமே மகிழ்ந்து— ஏன்.

௰எ. சம்பிரம விருந்துக்காட்சி.

விருத்தம்.

இப்படிச் சொல்லிஆக, இயேசுவின் முகத்தின்முன்னே
செப்பரி விநோதந்தீர்ந்த, சித்திரசோலையும், சீழ்,
அற்புத விருந்துசாலே, அநந்தஊண் வகையும்கண்ட
விற்பன மதனில்கொஞ்சம் விள்ளுவேன் அள்ளுவேனே!

இராகம், பந்துவராளி. ஆதிதாளம்.

பல்லவி.

விருந்து வைத்தானே! சம்பிரதாயம்
தெரிந்திடத்தானே!

அநுபல்லவி.

விருந்து வைத்தனன் தெரிந்து சோலையில்
மேசியா வேசுமுன் ராஜ பவுசினில்
மருந்திதைவிட வேறிலே என்றெண்ணி,
மந்த்ரஇந்த்ரமகா தந்திர சாத்தானவன்— " விருந்து.

சரணங்கள்.

க சித்திரச் சோலையிலே, நடுப்பகல்
செவ்வெயிற் காலையிலே,
விஸ்தாரச் சாலையிலே, சிறந்து
விளங்கிய மூலையிலே,
மெத்தஅலங்கிர்த, ரஞ்சித, மஞ்சித
விஞ்சைக ளெஞ்சிடா மேசையும் பூசையும்
சுத்தமகத்துவ ராஜர்க்கு மில்லாத
சூத்திரத்தோடுமா காத்திரந்தங்கிய— விருந்து.

உ பற்பல சாதங்களும், கறியின்
பலவர்ன பேதங்களும்;
அப்ப விநோதங்களும், இறைச்சி
அநேக அதீதங்களும்;
சுப்பிர பாத்திர பத்தி வானத்து
துலங்கிய தாரகை மேசையிலே மின்ன;
ஒப்பு மாரோமை அரண்மனைப் பந்தியும்
உன்னோடு நிற்பதற் கென்னோடிலேயென—விருந்து.

௩ உப்புத் தண்ணீரோடு, நன்னீரில்
உறையும் வால் மேற்றோடு
செப்பு மீன்கள்சோடு, அநந்தமாய்
சேர்ந்தவைக் கென்னீடு?

வெப்பமாம்பொந்துசு லுக்றின் குடாவிலும்
மேற்றிசைஆபிரிக் காவின் கரையிலும்,
பப்புறும்சிந்து நதிகளின் மீன்களில்;
பட்சிக்கத் தக்கவை உச்சிதத் தோடவன்— விருந்து.

ச வேடிக்கை ஓர்பீடம், மதுரச
மேவு ரத்தக் கூடம்;
வாடைக் கென்ன கோடம்? தொண்டரின்
வாகு திவ்ய வேடம்;
சேடிளங்கானிமுத் ஹயிலசுதம்மிற்
சிறந்த தீர்க்காங்க யௌவன்ன சவுந்தரர்,
மோடி தியாளுள் வனதேவதை யெனும்
முக்கிய தோழிமார் பக்கத்திலேநிற்க— விருந்து.

ரு கன்னிமார்கள்கூடி, சுகிர்த
கனிந்தராகம் தேடி;
நன்னயமாய்ப்பாடி, திவ்ய
நடனம்செய்வார் கோடி;
பண்ணும் சுதியும் சுரமும் இசைகளும்,
பாசஅராபிய வாசனைப் பண்டமும்,
இன்னும்அநேக விநோத விதங்களும்,
எங்கெனும் இல்லாத இங்கிதமாகவே— விருந்து.

௰அ. இயேசு விருந்தை மறுத்தல்.

விருத்தம்.

தந்திரமா சாலமதில் கிறிஸ்துமுன்னே
சம்பிரமமாம் விருந்தினுடைய காட்சிகாட்டி,
விந்தைமிகு தேவசுதா! அருந்துவாரும்,
விலக்கினவை அல்லநிவை, உயிரையோம்ப
சுந்தரவான் சூழ்புவியில் உமதுதந்தைச்
சொலவலியால் பிறப்பனவை, அதனால்நீர்தான்
எந்தவித மும்பொசிக்கத் தகவென்றான்பேய்
ஏசுபதி யுரைத்தனைத்தும் வீசினாரே.

இராகம், சாரங்கம். அடதாளசாப்பு.

பல்லவி.

ஏன்இந்தவினை தொடுத்தாய், மறைவில்வாளி
எடுத்தென்மேல் ஏன்விடுத்தாய்?

அனுபல்லவி.

வான்இக உலகுக்கும், வருபொருள் முழுதிற்கும்
வரங்கள் பெற்றவன் நானே!
சுரங்கம் ஒற்றினை ஏனே!— ஏன்.

சரணங்கள்.

௧ எல்லாம் எனதுடைமை மெய்தானே, நீ
எனக்கு விருந்திடுதல் பொய்தானே!
பல்லுயிர் ஓம்பலும் என் கைதானே, எனக்கு
பசிக்கிடுவே னென்று பகர்தலும் வசை தானே!
பகைப்பாம்பே இதுசுத்தப் பகடிஉனக் குற்ற
மிகைக் குணம் இனி மெத்த விதமேன்? அடபித்த—ஏன்.

௨ பூதலம் எல்லாம்எனக்கு முழுச்சொந்தம், அதை
புறத்திருந் தேற்பது நிற்பந்தம்!
காதல் எனக்கிருக்கில் பலவந்தம், இன்றிக்
கட்டளையிட் டழைத்திடக் கைவருமேஅது சந்தம்;
கள்ளஞாயமோ? உள்உபாயமோ?
தெள்அபாயமோ? சித்திமாயமோ?— ஏன்.

௩ என்னால்ஆகாத தொன்றுண் டால்ஆமா, நான்
இட்டால்விதிஅநர்த்த மாய்ப்போமா?
நின்னைப் பசிக்கெதுவும் கேட்டோமா? உன்
நீச விருந்திதனை நெஞ்சிலிட்டோ நாமா?
நீதம்அல்லாதே, நீசம்சொல்லாதே!
வாதுபொல்லாதே, மாயம்நில்லாதே— ஏன்.

௰௩. சாத்தான் திரவியங்களால் இயேசுவைச் சோதித்தல்.

விருத்தம்.

நில்லாதென் றேசுவாக்கச் செட்டையோடு
நீள்நகத்தின் தொனியில்எல்லாம் மறைந்துபோக;
வல்லமையுண் டெனக்கதனை அறிவாய்நீயும்,
வலியஉனக் கவதிஇதில் இரங்கிஇந்தேன்;
அல்லஎன்று நீமறுத்தாய்! எடுத்தஎன்கையால்
அளித்திடினும் ஐஉறுவாய், என்றுசாத்தான்
நல்லதினி திரவியத்தால் இழுப்பேன்என்று
நண்ணுவான் கபட்டுலாகன் பண்ணுவானே!

இராகம், ஆனந்தபைரவி. ரூபகதாளம்.

பல்லவி.

இச்சை தவிர்ந்த மெய்ச்சுபோகனே! இனிஒருமதி,
எவிச்சொல்வதை மேவுயோகனே!

அனுபல்லவி.

அச்சயன் உனை, மிச்சை வென்றிடல்
அரிய தாகிடும், பெரிய நின்மனம்
மச்சிலா செயல் உச்சி வேண்டிடும்;
வணங்கிச் சொல்லுவேன் இணங்கிக் கேளினி—இச்சை.

சரணங்கள்.

௧ மானஎண்ணம் மிகவும் வேண்டினாய்! உனதுநெஞ்சில்
மகத்துவ ஈனம் அனைத்தும் தாண்டினாய்!
வேண வீரச் செயலைத் தூண்டினாய்! உலகவாழ்வு
விழை வனைத்தையும் குழையக் கிண்டினாய்!
சான்உலக்கையில் தோணிகட்டுமோ?
தருந்தகாரியம் உகந்தகாரணம்!
தோணிடேல், செயம் காணுமோ? மகா
சுத்தாதி வீரற்கும் சொத்திக்கை வெல்லுமோ?–இச்சை.

௨ நின்னை ஆரோ அறிய மாட்டுவார்? பெரியமனுஷர்
நினக்கு வந்தார் உதவி நீட்டுவார்?
பின்னும் உனது குலத்தைக் காட்டுவார்! ஏழைத்தச்சன்
பிள்ளை என்றுனை எள்ளத் தீட்டுவார்!
சின்னம் சிறுமை துன்னிவளர்ந்தாய்!
தேடுவார் இல்லைக் காடிதில்உன்னை;
மன்னும் பெருமை என்ன வகையில்
வந்திடும் உனக் கிந்த ஸ்திதியில்?— இச்சை.

௩ சும்மா தத்துவம் தேடிச் சூடுமோ? பொருளில்லாமல்
சுத்த சேவுகர் சேரக் கூடுமோ?
எம்மாத்திரம்உன்வலுமை நீடுமோ? திரவிய மின்றி
இருந்தால் உனதுவெறுஞ் சொல்ஆடுமோ?
அம்மா! பணத்தால் கனமும் சனமும்!
அதிக செயமும் துதியும் புவியும்,
இம்மை வாழ்வெலாம் செம்மையாய் வரும்;
இப்படிநீ இருந் தெப்படி ஏறுவாய்?— இச்சை.

௪ அந்திப்பத்தரின் பெரிய பேரையும், யூதேயா ஆண்ட
அவன் மகன் ஏரோது சீரையும்,
சிந்தி, அவர்கள் உயர்ந்த மேரையும், பொன்னால் அவர்கள்
சேர்த்த நாடுகள் செயித்த போரையும்!
எந்த ஒழுக்கம் புந்தி வீரத்
தியன்றிடாததும் பயன் றரும்பொருள்;
எந்தனக்கது சொந்தம் யாவுமே
என் சொலைக் கேட்டுநீ பின்செல் அது வரும்.-இச்சை.

௨௰. தேவபாலன் திரவிய நிர்ப்பலனைக் காட்டல்.

விருத்தம்.

பின்சென்று பொருளைஇட்டப் பேசின அலகைவார்த்தை
நஞ்சென அறிந்தயேசு, நரர்களில் அநேகர்மிச்சை
மிஞ்சியும் பெலன்செய்தார்கள், மிருதியாம் செல்வத்துன்பம்
வஞ்சகா கேளாய்என்று வாட்டினார் ஓட்டினாரே.

ராகம், சௌராஷ்டிரம். ஆதிதாளம்.

பல்லவி.

ன்ன வார்த்தை சொன்னாய்? ரோசம்இல்லாமல்;
னப் பசாசேநில்! ஆ[illegible]சொல்லாமல்!

அனுபல்லவி.

பன்னும் நிதிஅனைத்தும் பறக்கும் நில்லாமல்,
பகர் முப்பொருளும் இன்றி; அது, நீகல்லாமல்—என்ன

சரணங்கள்.

௧ கர்த்தத்துவத்தை மாந்தர் கைவசம் ஆக்க,
கைவந்தவைகளைப்பின் கட்டுடன்காக்க,
மெத்த திரவியத்தால் வெல்லுமோ? தீர்க்க
மெய்யறம் ஞானத்தின் மேன்மையாற் பார்க்க?
இத்தரை முன் பல ராச்சியம் நோக்க;
இருஞ் செல்வத் திடைவிழுந் திறந்தன, தாக்க;
எத்தனை மானிடர் இத்தரைமேலே
ஏழைகள் ஆயினும் இவைகளினாலே,
சுத்த வீரத்துவ தூதரைப் போலே
துவக்கிப் பேராண்செயல் முடித்தார் முன்னாலே—என்ன.

௨ கிதேயோன் எப்பத்தா முதலிய பேரும்,
கிடையின் பொடியன் ஆன தாவீது சீரும்,
போத அறிவாய் அவர் புகழென்ன! ஆரும்
பொருளாலோ யூதேயாவின் அரசுற்றார்? சாரும்
காதை விதந்து சொல்லும் குயின்றியஸ், ஏரும்
கனமும் பெறும் கூரியஸ் றெகுலுசைப்பாரும்;
ஓதும் இவ்வீரர்கள் உலகில் பொன் பாக்கியம்
உற்றடைந்தனரோ பிரபலஆக்கியம்?
பாதகா பணத்தினில் என்ன சலாக்கியம்?
பணமல்ல சுகுணமே மனுடர்க்கு யோக்கியம்—என்ன.

௩ பொருளே விசேடம் என்று புகழ்ந்துரையாதே;
புல்லாளர் உழையது போற்றுதல் தீதே;
பரம ஞானிக்குமனப் பாரம்; பொல்லாதே;
பத்திஅழிக்கும் புகை முற்றும் தகாதே;
அருளை விரட்டும்பாம்பே; ஆசைஆகாதே;
ஆசாமைஅனைத்திற்கும் அதுவேவேர், ஏதே;
கிரீடத்தின் மேலுறும் பொன் ஒரு பொன்னோ!
கீழதில் இலங்கிடும் முள்ளணி மின்னோ?
புருடர் கண்படை யழித்திடுமது என்னோ!
புண்ணலால் அதுஉயர் விண்ணென மன்னோ!–என்

௪ ராச முடி தலைக்கு நலம் தரல்தூரம்;
ரண்டு தோளும் இழுக்கும் குடிகளின் பாரம்!
தேசு புகழ் கனத்தால் என்னவோ சாரம்!
தின்னமல் தின்னும் எப்போதும் விசாரம்!
பாச மனது சித்தம் வாதுஅகோரம்!
பத்தியால் அதைஆளல் சுத்த மெய்வீரம்!
ஆசையைஅடக்குவதே மகா யுத்தம்!
அவன்அவன் மனம் வெல்லா ஆண்மையோ சித்தம்?
காசினி வெளிப்படை யெடுப்ப துன்மத்தம்!
கபட்டுளம் வெல்லுவ தேவலி மொத்தம்!— என்ன.

அர்த்தபாண காண்டம் முற்றும்.

மூன்றாவது:

உயுத்தவாபாண காண்டம்.

க. சாத்தான் இயேசுவைப் பிரதாப ஆசைக்குத் தூண்டல்.

விருத்தம்.

அம்பரன் சுதன் இவ்வாறே அதட்டவும்; குழம்பிச்சாத்தான்
பின்பதில் உரையில்லாமல் பேதலித் தான்என்றாலும்,
தன்பணக் குடிலம்யாவும் தான்ஒருப் படுத்தி, மீள
வம்பில்இச் சகத்தின்வார்த்தை வழங்குவான் தழங்குவானே.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

அரிய விற்பன்ன யூகியே! சம்பிரதாயத்தை
அடைக்கி மறைந்திருந்தால், நடக்குமோ பிரஸ்தாபம்?-அரிய.

அநுபல்லவி.

தெரி தரு சக லமும் தெரி குவை புக லுவை
செயி ரறு சரு வமுஞ் செயல் களி னழகிய
புரி குவை முழு வது மொழி நிகர் குயி லுவை
புற்றர வேநிகர் பிற்றுவ தேனரோ?— அரிய.

சரணங்கள்.

க விஸ்தாரமாம் உன்மனது; அதை உன்நாவு
விள்ளும்; சுகிர்தம் ஞானம் தெள்ளு நடு இவற்றின்
விமல பூரண கருத்தை, உன் உள்ளங் கொள்ளும்;
வேந்தர் சகல சாதி மாந்தர் உன் வாய் மந்திரம்
புத்தி கேட்டால்அச்சந்தம், ஆரோன்அகலம்
பொருந்து ரீம் தம்மிம் போலே இருந்திடும்; பூர்வக்யாணி
பொய்யாத நாவு போலும்; உயுத்த செயல் .
ஐயா நீமேவுகாலம், உலகம் எலாம்,
எத்தனை யோசிறு பித்தரேஆகிலும்
ஏவிய உன்வச ஆயுத பாணிகள்
சுத்தமா சவுரிய தத்துவ மேலிடார்
தொட்ட போர் வெட்டிடார் விட்டிடுவார்களே—அரிய.

௨ இந்தத் திவியசத்துவம், அனைத்தையும் நீ
ஏனோ மறைத்துப் பொது வானோன்போலே பதுங்கி
இருண்ட வனத்தில் அலைவாய்? உலகுக் கொரே
இசையும் பெயருமான திசை உன்னை ஏன் மறுப்பாய்?
விந்தைப் பிரஸ்தாப ஆசையே, அருஞ் செயற்கு
விழை வெழுப்பும் கொழுந்து பிழையா எழுந்த நெஞ்சில்;
வேண உல்லாசங்களை, திரவியத்தின்
தோண விலாசங்களை, அருவருக்கும்
சிந்திசை வானவ ருந்திரு வேதிரு
சிர்த்திய லாதொரு பூர்த்தியு மேவிலர்;
பந்தமி குந்துக னந்தரு தேவசேய்!
பாத்திர மானது கீர்த்திய லாவிலை— அரிய.

௩ பருவம் முதிர்ந்து போயினாய்! ஆசியா நாட்டை
பறித்திதன் முன்கேருகை முறித்தான் அலக்குச்சந்தர்;
பாலசிப்பியோஇதன் முன், கார்தச்சினியர்
பணைத் தோள்தனை நெரித்தான்; துணைத் தோளன் பம்பி
குருசில்தனை அடித்தான்; வயதுடனே [பொந்து
கூரிய புத்தி மன வீரியமும் வளர்ந்து
கூடுதல் தானும் உண்டு; சூலியஸ்சீசர்
பாடென்ன காணும் பண்டு! பிராயம் அதில்
பெருகிய போதவன் மருவிகல் மோதவும்,
பிரபலத் ததுவ்வா இரவலனென அவன்
பொருமினன் ஆதலின், தருமனீ பருவமே
பொன்றினை என்றுநீ நின்றிடேல் வென்றியே— அரிய.

——— ———

௨. இயேசு உலகப் பிரஸ்தாப மாய்கையைக் காட்டல்.

விருத்தம்.

இன்னனப் பாம்புசொல்ல, ஏசுவும் அவனைநோக்கி
மின்னன உலககீர்த்தி விலகுமே நிலையில்லாமல்;
மன்னுமெய்ப் புகழ்ச்சிபத்தி வளர்பொறை அறத்தெருளாம்,
உன்னைநான் விளம்பக்கேளோர் உரையென்றார் புரையென்றாரே.

இராகம், அடாணா. ஆதிதாளம்.

பல்லவி.

சதுக்கம் சதுக்கமாய்ப் பேசிக்கொள்ளாதே! அடா பாம்பே
சாட்சிவீண் அடா பேயே! துள்ளாதே! [உன்

அனுபல்லவி.

எதுக்கென்று ஈதெல்லாம் பேசுறாய்!
இல்லாத ஞாயத்தை மெய்போல வீசுறாய்!— சது.

சரணங்கள்.

௧ ஆளுகைக் கென்று செல்வத்தைத் தேட
ஆசை என் மனதில் செல்லுமோ?
ஆடம்பரத்துக்கென் றுட்சி சம்பாதிக்க
அவாவென் உள்ளத்தை வெல்லுமோ?
நீளும் உன்விவகாரம் என் நெஞ்சில்
நெல்இடைஎனும் புல்லுமோ?
நீச மாந்தரின் வாழ்த்தில் என்மன
நீதி மாற்றிட ஆராலும் ஒல்லுமோ?— சது.

௨ மைந்தர் துத்தியம் காற்று மாத்திரம்!
மாந்தர் தோய் மங்கைக் கூட்டமே!
மகிமை இல்லதை மாற்றைஅறியாமல்
வழங்குவார்கள்கொண் டாட்டமே!
மூந்து செம்மறி போலே பின்மறி
மூடமக்கள்போம் சாட்டமே!
முன்அவர்நுனி நாக்கில் பிழைப்பதில்
முகத்திகழ்ச்சியை ஏற்பதென் நாட்டமே!— சது.

௩ செம்மையின் நெறியான் தன்னையங்கடவுள்
சிந்தையில் உவப்பொடு நோக்குவார்;
சேனுலகருபர் அனைவர்க்கும் சொல்லி
திசைஎங்கும் அவன் பெயர் ஆக்குவார்,
மும்மையும் அழியா மெய்ப்புகழ்உடைய
முனி யோபுபோல் வினை நீக்குவார்;
மோசம் நின்னாலே ஒன்றுபின் ஒன்றாக
மூஎினும் அனைத்தையும் காலத்தில் போக்குவார்-சது.

---

௩. இதுவும் அது.

இராகம், கியால். அடதாளசாப்பு.

பல்லவி.

பொய்யைபொய்யைச்சொல்லிப் புளுகாதேபேயே!
புளியங்காய்இனிப்பென்றால் பொருந்துமோ, சீயே!

சரணங்கள்.

க துய்யனியோபிணை அறியாயோ சொல்லு?
சுத்தன் அவற்கு நீயோ தெர்ப்பைப் புல்லு!— பொய்.
உ வானெங்கும் ஓங்கிய பேர் பெறு சீலன்
வையமும் ஓங்க நினைந்து செங்கோலன்— பொய்.
௩ கண்டாயோ? தாசனை என்றுனைக் கேட்க;
கடிதோ செதும்பீரம்* என்றுநீ தாக்க— பொய்.
௪ வாது செய்தாய் அவன் மீதுநீ மெத்த
வந்த முடிவை அறிவாயே சற்றே— பொய்.
௫ வையகத்தின் புகழ் பொய்யதுவாமே;
வம்பொடு வம்பரும் கெம்புவர் தாமே— பொய்.
௬ பாரினில் போர் வெல்லும் பேர் என்ன பேரே?
பட்டப்பகற் கொள்ளைக் காரரின் சீரே— பொய்.
௭ சத்தியம் காத்து சகிப்பதே நேர்த்தி!
சாக்கிரத்துப்பெற்ற கீர்த்தியே கீர்த்தி— பொய்.
௮ பொய்ப் பிரஸ்தாபவா பொருந்துமோஎனக்கு
பூரண பிதாவின் புகழ் என்மனக்கு— பொய்.

௪. சாத்தான் எதிர்நியாயம் சொல்லுதல்.

விருத்தம்.

சொல்இது கிறிஸ்துசொல்ல, சோதனைக்காரன் மீள
வல்லவன் கடவுள்தாமும் மகிமையை மிகவும்வேண்டி
பல்உயிர் இடத்தும்இத்தைப் பரிந்துகேட்கிறதும் பொய்யோ?
சில்உரை புகல்வேன்என்று திட்டுவான் மூட்டுவானே.

இராகம், கல்யாணி. செம்படைதாளம்.

பல்லவி.

ஏது சொல்லுறீர் ஐயா! மகிமையை நீர்
இப்படிஇலேசில்எண்ண அற்பமோ பகடிபண்ண?

அனுபல்லவி.

கோதிலர் உன் தாதையரும மேதையைவிரும்ப, நீரோ
கொஞ்சமாய் அதைஎண்ணுதல்
சஞ்சலம் தேவகுமாரா— ஏது.

---

*செதும்பீரம்=சேற்றிலே இரம்.

சரணங்கள்.

க மேன்மை ஒன்றையே, தேவும் விரும்பி இந்
நேமியோடெலா, நாம லோகையும்,
வாமம் உறவே அமைத்து, நீமமுடனே நடத்தி,
வல்லமைச் செங்கோல் செலுத்திச்
சொல்லிலே அடக்கி வர!— ஏது.

உ வான லோகினில், தூதர் எல்லாருடை
ஈான வாழ்த்தலும், மோனம் ஆமென,
ஞானிகளும் பேதையரும் ஈனரும் குணத்தவரும்
நாற்றிற மனுக்குலமும்,
போற்றிட உளா வகுத்தார்— ஏது.

௩ விள்ளு நால்பலி, நேர்கடன் யாவிலும்
கொள்ளுவார் புகழ், தள்ளிடாமலே;
மன்னலுறு யூதரெனும், எள்ளுபுறத் தேசரெனும்,
மாற்றலர் நாங்கள் என்றாலும்,
ஏற்றிடுவாரே புகழில்— ஏது.

௫. சாத்தானை இயேசு இடித்துரைத்தல்.

விருத்தம்.

அன்னது கேட்டபோதெம் அற்புத மூர்த்தியேசு,
நன்னரே மகிமைக்கேது நலம்எலாம் படைத்ததேவன்
தன்னைஎல் லாரும்போற்றல் தகுதியே; நீசமாந்தர்க்
கென்னவோ புகழ்ச்சிஎன்றே இடித்திட்டார் நொடித்திட்டாரே.

இராகம், சௌராஷ்டிரம். அடதாளசாப்பு.

பல்லவி.

எங்கே நீ வைத்திருந்தாய்? மதிஇதை
எங்கே நீ வைத்திருந்தாய்?

சரணங்கள்.

க மங்களம் அனைத்தும்ஓர் வாக்கால் அமைத்தவர்க்கு
தங்காதோ புகழ்? அது தங்கில் அதிசயமோ?— எங்.

௨ நன்மைபல் உயிருக்கும் நயன்உறவே அல்லால்,
சும்மா வெறும்புகழைச் சுகிப்பரோ நிதிபதி?— எங்.

௩ வாழ்த்திப் புகழ்அல்லால் மற்ருேர் பதில்செலுத்த
பாத்திரரோ நரர் பரப்பிரம சோதிக்கு?— எங்.

௪ கைம்மா றில்லாத கனதயை யாவுக்கும்
எம்மாத்திரம் மாந்தர் இயற்றும் துதிஎலாம்?— எங்.

௫ சொந்தமாய் ஏதும் சுயத்தில் இலாமாந்தர்க்
கெந்த விதத்தில் இசையும் மகிமைதான்?— எங்.

௬ ஆக்கினைத் தீர்ப்பும் அசங்கையும் லச்சையும்
நீக்கி வேறுண்டோ நெறிகெட்ட மாந்தர்க்கு?— எங்.

௭ பாவம் இலாத பரிசுத்த தேவுக்கே
மேவும்; பிறருக்கு விலகுமே மெய்ப்புகழ்.— எங்.

௮ வேதன் மகிமை விருத்திசெய் மாந்தனே,
நாதன் உயர்த்துவர் நாளும், அதேபுகழ்.— எங்.

௬. இயேசுவுக்குத் தாவீதின் இராசாசன உரிமையைச் சாத்தான் எடுத்துக் கூறல்.

விருத்தம்.

அப்பொழுது சாத்தானும், தவிதுராசன்
அரியணையின் உரிமைஉனக் குளதாம்அன்ருே?
இப்பொழுது ரோமர்வசத் திருக்கும்யூத
ராச்சியமும் வலுமுயற்சி இலேயேல், மீள
கைப்படுதல் அரிதாகும்; அதனுல்நீயும்
கடிதினில்உன் ஆளுகையைத் துவக்காய், என்று
செப்பியதற் கேசுவிடம் கபட்டுருயம்
தெரிந்திட்டான் சற்பனையாய்ச் சொரிந்திட்டானே.

இராகம், ஆநந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

மாயமோ கீர்த்தி? என்ருல் அது போட்டும்;
மகுடமுடி உமக்குத் தரும் அது சூட்டும்.

அநுபல்லவி.

தேயத்தரசர் மெய்க்கும் செங்கோற்கை சிறந்தாய்!
ஜெகதவி ததிபதி மகவெனப் பிறந்தாய்!— மாய.

சரணங்கள்.

க *கன்னிமரியை உன்றன் அன்னையின் பாலே*
கர்த்தன் தவீதுனக்குப் பெற்றோன்; அதாலே,
அன்னோன் உனக்களித்த சொர்ன செங்கோலே
ஆர்கையில் விட்டுவந்தாய் அகதியைப் போலே?— மாய.

உ *வாக்குத்தத்தத் தேசத்தைப் பார்க்க ஒண்ணாது,*
மறவர் கொடுமையினால் நிறையும் இப்போது!
ஆர்க்கும் இருக்கட்டும் என் றமைதல் தகாது!
ஆதீனன் கண்முன்ஆட்சி ஆழிதல் ஒவ்வாது!— மாய.

௩ *உன் பிதா தாவீது ஒச்சின தேசம்*
உரோமர் நுகத்தடி ஆச்சுது; நீசம்!
வம்பன் தீபேரியுஸ் மாட்டுறான் நாசம்,
மன்னன் உனக்கிலையோ இன்னமும் ரோசம்?— மாய.

௪ *மின்னும் தேவாலய மெட்டலாம் போச்சே!*
மிகவும் அருவருப்பால் நகைஉறல் ஆச்சே!
பன்னும்அந் தியோகுவசைப் பழி பழம்பேச்சே!
பாராய் உன்சனம்எலாம் யாரார்க்கும் ஏச்சே— மாய.

௫ *சும்மா இருந்தால், உன் சுய அவகாசம்*
துன்னார் விடுவாரோ? என்னோ ப்ரயாசம்!
பெம்மான்முன் மக்கபீயுஸ் பிடித்தானே தேசம்!
பிரபுனக் கில்லையோ உன் பிரசையில் நேசம்?— மாய.

௬ *ஆளுகை மீதினில் ஆசையே இல்லை*
ஆனால், உன்கடமையில் அசதியோ, வல்லை?
நீளுன்பி தாவீட்டில்லை ராக்கியம், தொல்லை
நிபுணர் உரையை இப்போ நிசம்செய்வாய் நல்லை!— மாய.

எ. இயேசு சாத்தானுக்குப் பதிலுரைத்தல்.

விருத்தம்.

செங்கோலைச் செலுத்துமென்று பகைஞன்செப்ப,
செங்கோலும் பிறவனைத்தும் அதததன்காலம்,
புங்கவனின் செயல்போலாம்; எனக்கோசெல்லும்
பூதலத்தை ஆளஇன்னும் காலம்; அந்நாள்,
பங்கமுறும் உனதுசிரம் நிசமேசொன்னேன்;
பாராள நீஎனைஏன் விரும்பவேணும்?
இங்குனக்கு விளங்கவைப்பேன் கேள்என்றியேசு
எடுத்திட்டார் பேய்மடங்கக் கொடுத்திட்டாரே.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

க ஆரும் காலத்தில் எதுவும் பின் விலகாதே! என்றென்றும்
அதது காலம் அதது செயல் பொய்யாதே!

உ தீர்க்கர் என் ஆளுகை நீக்கம் உறாததென்றாரோ? எனில்
செப்பின என் பிதா தப்பவும் விட்டுடுவாரோ?

௩ ஆளுகை எனக் கமைத்த வானவன் தானே, அது
அடுத்த காலம் கொடுப்பார் ஆம் பயம் ஏனே?

௪ சிறுமையில் எனைப் பழக்கி பின்முடி சூடி, வைப்பார்
தேவ செயலே செல்வம் ஆம் கோடாகோடி.

௫ நிந்தை தூஷணை வல்லடி பாடுகள் படுவேன், மன
நிச்சயத்துடன் லச்சைகள் சகித்திடுவேன்.

௬ பாடுபட்டவன் பலவான்; வீரம் செய்வான்; கீழ்ப்
பணிந்தவன் முடி அணிந்து நித்தியம் உய்வான்.

எ நானே ஆளும் காலம் உனக்கு நாசம்! பின்னை
நடுக்கமின்றி முடுக்கிறாய் என்ன? மோசம்!

அ. சாத்தானின் சாட்டுப்போக்கு.

விருத்தம்.

நான்உல காளும்காலம் நாசமே உனக்குப், பின்னை
ஏன்என தரசில்ஆசை? என்னவும்; பேய்தான்சொல்வான்
வானமேல் இடிந்தும்என்ன? மலைஉருண்டாலும் என்ன?
இனமே எனக்கெப்போதும்! இனிஎன்ன பயம்? என்றானே

இராகம், மலையாமி. திரிசுரதாளம்.

பல்லவி.

ஓலோலம்! எனக்
கூழி ஊழி காலம்! ஓலோ.

சரணங்கள்.

க ஞாலமும் வானும் பிற உலகங்களும்
நாளை நிலைபெயர்ந்தும்! ஒருக்
காலும் எனது நிலைமை மாறுதினிக்
கால் என்ன? வால் என்ன?— ஓலோ.

உ முட்டமுழுக்க குளிர் எங்கே போச்சுதோ!
முன் என்ன? பின் என்ன? சர்வ
துட்டன் எனக்குச் சுகம் என்ன? துன்பென்ன?
துக்கம் உண்டோ துணிந்தால்?— ஓலோ.

௩ நம்பிக்கை உள்ள அளவும் இருக்கும்
நலம்போமோ என்று பயம்; யானைத்
தும்பிக்கை அற்றபின் நின்றென்ன? கொன்றென்ன?
சுட்டென்ன? விட்டென்ன?— ஓலோ.

ச மன்னன் உன் ஆளுகைக் காலம் எனக்கு
மடிவென்று சொன்னதுண்டே! அதால்
என்ன எனக்குப் பயமோ? இப்போதும்
இறப்பலால் சீவன் உண்டோ?— ஓலோ.

௯. இயேசுவுக்கு உலகப்பயிர்ச்சி இல்லை என்று சொல்லி சாத்தான் தூண்டுதல்.

விருத்தம்.

இத்தகை புலம்பிப், பாம்பும் ஏசுவுக் குலக காட்சி
சுத்தமே தெரியாதாலே துணிகரம் இலைஎன் றுன்னி
மெத்தவும் அறிந்தோன்போல விரித்துரை செய்தான், ஏசு
கர்த்தனே கேளாய்என்று கட்டுவான் கொட்டுவானே.

இராகம், கல்யாணி. அடதாளசாப்பு.

பல்லவி.

தேசவளப்பம் ஒன்றும், ஏசு நீர் அறியீரே!
தெரிந்தால் அல்லோ துணிவீர்!

அனுபல்லவி.

ராஜ விஷயங்களை நகுலம் உணர்ந்திடுமோ?
நடுக்கூபத் தவளைக்கு நாட்டுவளமை உண்டோ?— தேச.

சரணங்கள்.

௧ புருஷ இலக்கணம் மிக்கவே, அனைத்தும்
பொருந்தும் உமக்கவை தக்கவே!
வரிசை பெற்றவர் யாரும் பொய்க்கவே, உமது
மகத்துவ குணங்கள் சிறக்கவே
சிரசுபோல் இருந்தும் சிற்றூரில் வாழ்ந்த நீர்
தேசச் சிறப்பறியா மோசத்திற் கென்சொல?-- தேச.

௨ நாசரேத் தெம்மாத்திரம்! கலிலேயா
நாடுறுவிச் சேத்திரம்,
ஏசுவே, உன் நேத்திரம், பட இல்லை
இது உனக்கோ பாத்திரம்?
ஆசைக் கெருசலையே ஆண்டில் சிலதரம்
அடைந்து கண்டால் உண்டு, கடந்ததுண்டோ கண்டு?—

௩ உலகத்தை நீ காண, இல்லை அதன்
உல்லாசங்கள் வேண;
கலகம் செய்யுமாண, அரசர்களின்
கனக ரற்னம் நாண,
பலகட்டிடங்களொடு, பகர் அமைச்சர் மடங்கள்
பார்த்தால் அல்லோ தெரியும் பகட்டும் சிமிட்டுகளும்.—தே.

௪ மெத்தப் படித்த போதுமே, பயிர்ச்சி இல்லா
விபரம் பயனில் ஏதுமே;
சுத்த வயிரம் ஓதுமே, பழக்கம்; அதால்
தொலையில் அகலும் பேதுமே;
சித்தம் உமக்கிருந்தால், செகத்தை எலாம் கணத்துன்
திஷ்டி வருவிக்கிறேன், இஷ்டம் உண்டானால் சொல்லும்.

௰. சாத்தான் இயேசுவை ஓர் மலையுச்சிக்குக் கொண்டுபோய் ஆசியாவின் பல இராச்சியங்களையும், பார்திய படைமுஸ்தீதுகளையும் காண்பித்தல்.

விருத்தம்.

இஷ்டமுண்டோ எனக்கேட்டுப், பதில்உண்டாமுன்
ஏசுவினைச் சாத்தான்ஓர் மலையின்உச்சி
வெட்டெனவே தூக்கிவைத்தான்; அதன்முன்னாலே
விஸ்தார வெளிஒன்று; புடைஇர்ஆறு;
நெட்டோட்டம் ஒன்றுவளைந் திடு, மற்றொன்று
நெறியிணைந்து பரவைவிழும்; சிகரம்முன்னே
பட்டணங்கள் முதலான அநந்தம்காட்சி;
பாரென்றான் பேதைமையைத் தீரென்றானே.

இராகம், வராளி! ஏகதாளம்.

பல்லவி.

உச்சி இதுமலை உச்சி வெகுதிறமே! இதன்,
உத்தம காட்சியே, மெத்தவும் சூட்சமே! உச்சி.

அநுபல்லவி.

பொச்சம், உவளகம், அச்சவனம், விளை
புலம், சலங்கள்முன் ஓடி, மா
பொற்பாலயங்களை கற்கோபுரங்களை
போகப் புறம்விட்டு வேகப்பட்டு வந்தோம்;
புங்கம் இதன் சிகரம், விளங்குது
எங்கும் பல நகரம், புரவலர்
பொன்னான மாடங்கள் மின்னான கூடங்கள்
பூஷணம் மிஞ்சிய வேஷமும் விஞ்சையாய்;—உச்சி.

சரணங்கள்.

௧ மன்னர் சிறந்த அசீரியர் பண்டை
வரம்புகளை இங்கு பாராய்! இரு
வாரிய ராக்குசை பேரிய கஸ்பியன்
மட்டு வெகு தொலை நேராய்; கவி
பன்னும் இந்து கிழக் கின்னும் ஐப் பிராத்தினை
பாராய் மேற்குத்திசை சீராய்! தெற்கே
பார்சுக் குடாவரை போர்செய் அராபியர்
பாலை வனம் எல்லாம் தேராய்!
முன்னமே னயினசு பொன்னொளி என்ன
முடித்தநினிவை தொடுத்துப் பார் அங்கின்னம்,
முக்கிய சல்மநசர், இசரலை
துர்க்குணமாக விசர், படுத்துறான்;
முற்றும் இதன் மர புற்று விளங்கிட
முன்னாலே நோக்கதின் வன்னம் அறிந்திட.— உச்சி.

௨ நாவெல்லாம் போற்றிய பாபிலோன் என்னும்
நகரியைப்பார்; என்ன வன்னம்! அதை
நாட்டினோன் உன் பிதா வீட்டை இருவிசை
நஷ்டிப்படுத்தினோன் முன்னம்; வேத
காவலன் கேருசு மேவி அவருடை
கட்டை அவிழ்த்தனன்; இன்னம், மகா
கந்தபர் சப்போலீஸ் சந்த நகரியில்
காணாது கேருசின் சொர்னம்;
ஒவிய பத்தரா, வாவிஎக் பத்தனா
உயர் எக்கத் தோம்பிலாஸ் வயிரக்கல் தங்கிய
உச்சிதமாம் நூறு-வாசலின்
லச்சணமோ! கூறு; சவுந்தர
உல்லாச மோடியோ! எல்லா அங்காடியோ!
ஒப்புற்ற காங்கியோ! துப்புற்ற றாங்கியோ!— உச்சி.

௩ சூசாப் பட்டண வாசலும் யூலியஸ்
துறை அதின் கரை ஓரம், அதன்
சுத்தப்பளிங்கு நீர் நித்த மன்னோர் அலால்
தொட்டருந்தாரே பின் ஆரும், பெயர்
வாசமக் கத்தோனித் தேச அரசரின்
வர்ன சிலூசியா தூரம்; அப்பால்
வங்கண நீசிபிஸ் அங்கு விளங்குது
மட்டிடல் ஆமோ விஸ்தாரம்!

ஆலைசயற் றாக்ஸதா, தேசிவன், மேதார்மேடான
ப்புறம் காணாது ஒப்புறத் தோணாது;
பூகை இவை ஸ்தலங்கள், அர்சாசஸ் என்
யோகிப்புவி நலங்கள், இப்போதவை
அந்தியோக் மன்னர்கை, நொந்திடப் பார்தியர்
அட்டாதுட்டம்பண்ணி, எட்டாக்கை ஆக்கியர்.—உச்.

ச பார்திய மன்னனிப் போதுதே சிப்போனில்
படை எடுத்துப் போறானே, அவன்
பகைஞர் சிதியர் மிகசோக் தியானவை
பதங்குலைத்தநிற் றானே, அவர்
பீதி உறும்படி மாதுரியத்தில் என்
பெலனைப் பாரும் என்றானே; சேனைப்
பெருக்கையும் அதன் கருக்கையும் விட்டுப்
பெருமை பார்க்கிறான் கோனே;
வாதுருக் காவரி, காதெறி தூவரி
மாஉத்தி தீரரும் ராவுத்த வீரரும்,
வட்டம் இடுவது பார், துவிசமப்
பட்டும் அணிவிடுவார், பிறை உரு
மாதிரிஆகவும், கோதில் அமர் நிரை
வைத்துப் புறப்படும் சித்திரம் கொஞ்சமோ?— உச்சி.

ரு பட்டண வாசல் திறக்கவும், பார்திய
பவுஞ்சு போகுங் கம்பீரம்! லெகு
படைக்கலத்துடன் அடைக்கல உறை
பரிக்கவச ஒய்யாரம்! உடல்
கட்டும் குதிரைகள் மெட்டும் சவாரிசெய்
கதியும், என்ன ஆங்காரம்! பல
காட்டில் அடங்கிய மேட்டிமைச் சேவகர்
கணம், மணற் பிரகாரம்!
ஒட்டறக் கோசியா, கிட்டவோ கண்டவோர்
ஓதுமர் கியானா, கிர் கானிய விந்தமே
ஓசைகாக் காசுமலைத், தொடரதின்
வாசமலர்ந்த தலை, ஐபீரியா
உத்தம அத்திரோ பத்தியா மீதியா
உள்ள புருடர்கள் வெள்ளம்போல் சாய்கிறார்.—உச்சி.

சு போருக்கவர் அணி சேரும் வகையைப் பார்!
போகிற போக்கில் முன்ஆடி, பகை
பொங்கி முட்டாது புறங்கொடுப்போரென
புறப்படுவோர் விட்டோடி; இவர்

தூர விலகுதல் நேரே வருதவில்
சூது! சதிப்பர் பின் கூடி; அதோ
தொட்டம்பு மாரியால் கிட்டினர்! அத்திரம்
சூழும் களமதை மூடி!
காரிய மேகம்போல் வீர பதாதிகள்
கட்டும் உருக்கினில் சட்டையும் மாட்டியுன்
கண்ணுக்கு முன்னே நிற்க; அவர் தொகை
எண்ணுக்கு என்னவைக்க? ரதங்களும்
கரிகள்மேல் அம்பாரி சொரிவில்லி பின்பூரி
கண்கள் வேண்டும் பார்க்க எண்கள் இலாத்தொகை!–

௭. மார்க்கம் நெறிப்பட சாக்கிரதை செயும்
வழிவெட்டிகளின் கூட்டம்! அவர்
மண்வெட்டி குந்தாலி கோடரி கூடங்கள்
மற்றும் சாமானங்கள் ஈட்டம்! பாலம்
தீர்க்கின்ற கொத்தரும் தச்சரும் ஆதி
திரண்டவர்கள் மணல் ஆட்டம்! ஒரு
திமில் ஒட்டைகளும் ஒட்டைகள் வேசரிச்
சேனைகளும் என்ன சாட்டம்!
ஆக்கிரத்தோடு பராக்கிரம் தங்கிய
ஆதியும் வீரராம் பார்தியரின் பெலன்
ஆருக்கு விண்டிடலாம்? ஆரிவர்
சீருக்கு நின்றிடலாம்? இவை எல்லாம்,
அற்புத எசுவுன் பொற்புறு பார்வையில்
அற்பமோ, சொல்லுவாய்? சொற்பமோ, விள்ளுவாய்–

௰௧. சாத்தான் அப்புறம் இயேசுவோடே சூது பேசுதல்.

விருத்தம்.

மலைஉச்சி தனில்நிறுத்தி இவைகள்யாவும்
வகைவகையாய்க் கிறிஸ்துவின்முன் வரவேசெய்து,
அலகையிதால் இகல் முயர்ச்சி உமக்கிப் போதே
அவசியமென் றுணர்த்துதற்காம் பூதேயாவவ
நிலைபெயரா தனுபவிக்கப் பார்தியாரின்
நேசமுற வின்றமையா தெனவேசூதாய்ப்,
பலவகையில் அவகடத்துப் பாணமாரிப்
பறத்தினனே பழஞ்சருப்பத் திறத்தினனே.

இராகம், ஆநந்தபைரவி. ஏகதாளம்.

பல்லவி.

காட்சி இதன் ஊடு பொருள், சூட்சமதை நீகண்டாயோ
ஏசு காரணுஇத் தோரணத்து— காட்சி.

அநுபல்லவி.

ஆச்சரியமான இவை அனைவற்றுலும் உனக்கு
பாய்ச்சுவேன் விவேகம் எலாம் காய்ச்சின கற்கண்டெனவே.

சரணங்கள்.

க தீர்க்கருடன் தூதர்களும் தெளிந்தே உன் ஆட்சித்
திடனை முன் செப்பினும்,
ஊக்கமுன் பிதாவினைப்போல், உழைப்பு முயர்ச்சி இன்றி
ஒருநாளுமே அரசு வருமோ? வாராது சொன்னேன்—காட்.

உ சகலவிஷயத்திலும் சகுணமும் குறிகளும்
சாற்றுந் தீர்க்கச்சொல் யாவும்,
தகுமாம் உபகரணம் சமனே கூடாதிருந்தால்
மிகவும் அபலமாகி விடுமே! நீ அறியாயோ?— காட்சி.

ங சூதர் சமாரியர் தொகையாய் உன் அரசை
சும்மா உன்கைக் கிட்டாலும்
வாது புரியும் ரோமர் பார்தியருக்கிடையில்
ஏதுவிதம் நெடுநாள் பாதுசெய்வாய் சுகமே?— காட்சி.

ச இருவரில் ஒருவரோ டிணக்கம் உற்றல் அதே
எப்படியும் சுகமே!
மருவிடு பார்தியனை; வல்லோர் இவர்! முன் ரோமர்
கருவம் அறுத்தவர்கள்! பருவம் இதை விடாதே!— காட்சி.

ரு அந்திகோ னுசுடன் ஆதி கிர்கானுசை
அடித்துச் சிறை செய்தாரே;
சந்தோஷமோ சொல்வாய்! சாற்றுவேன் பார்தியனை
உந்துணை ஆக்கிவைப்பேன் எந்தவிதமும் பாராய்—காட்சி.

சா கனத்த போர்ாட்டத்தாலோ? கட்டுப்பட்டாலோ?
காரணன் தாவீதேந்திரன்,
தனத்தை அடையவேண்டில் தப்பாது பார்தியரின்
மனத்தைச் சம்பாதித்திடு! மாட்டாய் ஆனல் அவமே—காட்.

எ காபொரில் மேதியருள் கலைந்த யாக்கோபின்
கருபத்து மக்கள் கூட,
மாபெரிய யோசேப்பின் மக்கள் இருவருடை
ஆபத்தை நீ தவிர்க்க அடுத்த வகை இதுவே— காட்சி.

அ காவலிலிருக்குமிவர் கட்டவிழ்த்திவருடை
காணிநீ மீண்டளித்தால்;
தாவீதின் சீர்மை எகிப் பத்துமுதல் ஐப்ராத்து
மாவாறுமட்டும் ஓரே, காவலன் ஆவை அப்போ—காட்சி.

௰உ. சாத்தானை இயேசு சீறிக்கூறல்.

விருத்தம்.

வலியிகல் முயர்ச்சியாவும் மாணிடா யுதங்கள்தாமும்
மெலிவுறும்; இஸ்ரயேலர் விடுதலைக் குனக்கேன்ஆவல் ?
ஒலியிது விருதா; வேளை உற்றகால் அவரும்மீள்வார்,
கலிபுரிபேயே! என்று கடிந்திட்டார் கடிந்திட்டாரே.

இராகம், கௌளிபந்து. ஆதிதாளம்.

பல்லவி.

போதும் போதும் இந்தப் புத்தி! பசாசேபோ!
போதும் போதும் சொன்னது போதும் அடா!

அனுபல்லவி.

வாதில் ஆடம்பர மாங்கிஷ கோலத்தை
மந்திர இந்திர தந்திர சாலத்தை
யோதக் கொணர்ந்தே என் கண்ணுக்குக் காட்டினாய்
புரிவேன் ஆசை என்று புகழ்ந்து பாராட்டினாய்—போ.

சரணங்கள்.

க மந்திராலோசனை என்றும், மாற்றார், உதவி, என்றும்
மற்ல், என்றும் உறவென்றும் வெகுவாகச் சாற்றினாய்;
முந்தஇருடிகள் உவந்துரைத் தவைகளும்
முடியா துபகரண மின்றி எனத்தூற்றினாய்
இந்த உலகிவற்றில் மருண்டு சுழல்வது போல்
என்னையும் நினைந்தல்லோ இவைகளைப்போற்றினாய்;
எந்தன் தருணம் இன்னும் வரவில்லை, வரும்போதில்
எல்லாம் கைகூடும் என்பதறியாமல் ஊற்றினாய்!—போ.

௩. உயுத்தவாபாண காண்டம்.

௨ நீ சொன்ன சூழ்ச்சியால் யுத்த எத்தனங்களால்
நிசம்அல்ல நரவலி எனச்சொல்லிக் காட்டினாய்!
தாசன் தவீதரசை நான்ஆள வேண்டும் என்றால்
தமரைச் சிறை அவிழென்பதும் பொய்யே நீட்டினாய்!
நாசம் ஆக்கினை அல்லோ எழுபதின் ஆயிரம்
நரரை அவர்களுக்குள்? தொகை எண்ண மூட்டினாய்!
ரோசம் இல்லாமலே நீ இஸரேலர் மீதிஷ்டம்
உடையோனைப் போலிப்போ வெறும்போலி காட்டினாய்.

௩ தங்கள் பவத்தினாலே தமைச்சிறைப் படுத்தினார்;
தமரீராறு கோத்திரர் சாபம் என்றறியோமோ?
பங்கம் எகிப்பத்தியர் பாகாலை அஸ்தரோத்தை
பரிசு கெட்டவிதமாய் தொழுது கொளலும் போமோ?
அங்கவர் தமைச் சூழ்ந்த அருவருப்புகள் எல்லாம்
அருந்தினர் ஆண்டபரன் சிந்தை எப்படி வேமோ!
இங்கிந்நாள்வரை அவர் மனந் திரும்பவு மில்லை,
இவரை இப்போ விடுத்தல் ஞாயத்து முறைஆமோ?—போ.

௪ காலம் வரும் அப்போது அபிரகாமை நினைந்து
கர்த்தர் அவர் மனதில் பரிசுத்த ரூபி வார்ப்பார்;
சீலமுடன் அவர்கள் பச்சாத்தாபமடைந்து
தேடக்கடவுளரும் திரும்பத் தம்மிடம் சேர்ப்பார்;
சாலப்பெரிஐப்ராத்தும் செவந்த கடல் யோர்தான்போல்
தானே திறந்தவர்க்கு வழியைக் கொடுத்தல் பார்ப்பார்,
பால வயதினர்போல் அவர்கள் தழைத்திடவே
பண்ணி பிதாஅவர்கள் வறுமை யனைத்தும் தீர்ப்பார்.—போ.

௰௩. சாத்தான் திகைத்தல்.

கொச்சகம்.

மெய்யான இஸ்ரேயேல் வேந்தன் இப்படி உரைத்து
பொய்யன் பசாசு புகல் கபடம் தான் அறுத்தார்;
துய்யநெறிச் சத்தியமுன் சூதுபொய்கள் நில்லாவாம்;
ஐயோ என்சொல்வேன் என்றந்தரித்தான் சாத்தானே.

உயுத்தவாபாண காண்டம் முற்றிற்று.

நாலாவது:

விசயகாண்டம்.

க. சாததானின் தடுமாற்றம்.

கொச்சகம்.

க தோற்றானே சோதனைப்பேய் தோற்றபின் தன்னெஞ்சினி[லே
மாற்றுரைக்கு வேறே வழிஅறியா தேதிகைத்தான்;
போற்றிப் புளுகி எவைப் பூவையினை எய்த்தாப்போல்
சாற்றி அவசெயமாய்த் தட்டழிந்து நின்றனனே.

உ மாளாதென்றே அறிந்தும் வந்தவழியே திரும்பில்,
தாளாண்மை அல்லஎனத் தாரணி நகைக்குமென்றே;
கோளரிமுன்னே கபட்டுக் குள்ளநரி நின்றாப்போல்
மீளவும் சதியை விரும்பிவழி ஆய்ந்தனனே.

௩ ஆலை விளிம்புதனில் ஆயீக்கள் ஓட்டுகிலும்
மேலுமேல் வந்து விழும்கதைபோல் சாத்தானும்
சிலச்சீயோன் இறையால் சீர்அழிந்து போனாலும்
காலம் வரையில்இனும் காய்வனென்று காய்ந்தனனே.

௪ பாறை யுடலில் அலைபட்டுக் கரைந்தாலும்
சீறித் திரும்பித் திவலைநுரை ஆவதுபோல்;
கோறல் புரியும் கொடுமனது சாத்தானும்
மீறி அழிய விரைந்துவந்தான் மீளவுமே.

உ. சாத்தான் இயேசுவை ஓர் மலைமேல் கொண்டுவந்து விடல்.

வசனம்.

சாத்தான் தோற்றுப்போயும், அதோடே விட்டுவிடாமல் திடீரென இயேசுவை அந்தரத்திலே தூக்கி ஓர் மலைமீது கொண்டுவந்து விட்டான். அதன்முன் ஓர் மைதானவெளி தோன்றிற்று. அது அகலத்தில் சுருங்கினதும் நீளத்தில் ஓங்கினது

மாய் இருந்தது. (அது இத்தாலி.) அதன் தென்கரையில் தென்கடலும் (மெதித்தராணியக்கடல்), வடதிசையில் மலைத் தொடரும் (ஆல்ப்ஸ் மலைத்தொடர்) இருந்தது. நடுவில் ஓர் நதி (தீபர் நதி), நதியின் இருகரையில் மிகச் சிறப்பான பட்டணம்; அதில் ஏழு மலைமேல் கட்டி ஆகாயத்தை அளாவி நின்ற கோபுரங்கள், கோவில்கள், தோரண வாயில்கள், நடன சாலைகள், ஸ்நான மண்டபங்கள், சலதாரைகள், பிரதிமை சிலைகல், ஜெயஸ்தம்பங்கள், கம்பீர நடைசாலைகள், தோட்டந்துரவு சோலைகள் அநேகவிசித்திரமாய்த் தோன்றின.

---

௯. ரோமை நகரியின் சிறப்பை சாத்தான் இயேசுவுக்குக் காண்பித்தல்.

விருத்தம்.

அண்ணல்கிறிஸ் தேசுவின்மேல் பகைஞன்காயம்
அழலெறிச் சோதனையைத் தொடர்ந்தோர்வெற்பில்,
வண்ணமுறுந் தலைநிறுத்தி ரோமைநாட்டின்
வளமையெலாங் காட்டியிப்போ திபரிஞூசை
கன்னிதனின் றேதுரத்தி ரோமைமீட்டால்
கனதனங்கட் கிடமான அதுமல்லாமல்
எண்ணகனற் உலகமெலாம் உனதாமென்றே
எத்தினன் காலிலி விஷத்தினனே.

இராகம், அசாவேரி. அடதாளசாப்பு.

பல்லவி.

ஈது ரோமை நாடு, நீ இது
மீது விழிபோடு.

அனுபல்லவி.

பூதல மீதெங்கும், காதல் கனம் தங்கும்
மாதர்கள் மொய்க்கின்ற, வேதர்கள் மெய்க்கின்ற— ஈது.

சரணங்கள்.

௧ சாதிகள் யாரும் புகழ்ந்து சொல்லப்பட்ட
சகல தேசத்தையும் சாடிக் கொள்ளைஇட்ட,
ஓதை மகாகிர கங்கதம்பம் முட்ட
உள்ள நகரி இதற் கீடிலை கிட்ட— ஈது.

௨ ராச அரண்மனை தார்பி மலைமேலே!
நாகம் அதன் அரண் ஏகுதல் ஆராலே?
தேசவிஸ்தாரம் சிறப்பும் அதுபோலே
செகத்தில் உண்டோ சொல்லு சேசுநீ இப்பாலே?-ஈது.

௩ கட்டுமானத்தைப் பகருதல் கூடுமோ?
காணும் சிற்பத்தினைக் கூறநா ஆடுமோ?
சுட்டும் அலங்கத் தொகைக்குளம் நீடுமோ?
சுத்த அதன்பொன் சுடரொளி வாடுமோ?— ஈ

௪ கோபுரம் எத்தனை? மேடைகள் எத்தனை!
குவலயம் வேறோர் இடம் உண்டோ இத்தனை?
தேவரின் ஆலயம் போல்இவை வர்த்தனை!
சித்திரக் கூடம் மணற் றொகை அத்தனை!— ஈது.

௫ தட்டுந் தளங்களும் தாங்கிய விற்கூரை!
தம்பங்கள் சித்திரக் கொத்துப் பணிமேரை!
வெட்டிய கேதுரு வெண்கல் மனைத்தாரை!
விந்தைப் பளிங்குபார் தந்தவேலைச் சீரை!— ஈது.

௬ வாசல்கள் எத்தனை! எத்தனை நேர்த்தி!
வந்து வெளிப்படுவோர் தொகை பூர்த்தி!
தேச அதிபதிமார் வரும் சேர்த்தி!
திரும்புவோரும் உள்ளே சேர்வரும் கீர்த்தி!— ஈது.

௭ மந்திரி மார்கள் தம் அங்கிகள் பூட்டி,
வருகிறார் தலையாரி மாரையும் கூட்டி!
சுந்தர முத்திரைக் கோலையும் நீட்டி
சோபித மாகத் தம் மீசையும் தீட்டி! ஈது.

௮ வெவ்வேறு தேசத்து மந்திரி கூட
வெள்ளக் கணக்கான சேனை முன்னோட
செவ்வை இருபுடை ராவுத்தர் சாட
திக்கெலாம் நின்றபல் செய்தி கொண்டோட.— ஈது.

ச. உலகமெல்லாம் ரோமைக்கு உட்பட்டது என்று சாத்தான் இயேசுவுக்குச் சொல்லுதல்.

கு ம் மி.

க தேவகுமாரனே நீ பாராய் எட்டுத்
திக்கிலும் நின்று சனத்திரள்கள்
மேவி ரோமைக்கு வருகிற யோக்கிய
வேடிக்கைக் கென்ன உவமானம்! அதற்
கீடுக் குறைப்ப தவமானம்!

உ அப்பியன் பாதையில் கண்போடு, அதற்
கப்பால் எமிலியன் ரோட்டையும் பார்;
குப்பமே குப்பமே மன்னர் பிரபுகள்
கூடி வருகிறாரே தேடி, ரோமை
நாடி வருகிறாரே மோடி!

ங மேரோ கிலோத்திரு தீவிருந்தும், அதின்
மேற்றிசை பாக்குஸ் திசையிருந்தும்,
சாரும் கருங்கடல் கொந்திருந்தும் இங்கு
சாயும் சனத்தொகை எவ்வளவு! எண்ண
வாயும் கடுக்குமே அவ்வளவு!

ச ஆசியா தேசத் தரசர்கள் விட்ட
அவருடை தூதர் அதோ பாராய்!
தூசியல் பார்தியர் தூதர் நடக்கிற
சொகுசைப் பாரும் அதோ போறார்! பலர்
வெகு சுறுக்கினிலே வாறார்!

ரு இந்தியா பொன்மலி கெர்சோனிஸ்
இலங்கை மன்னரின் தூதரெல்லாம்
விந்தையாய் ஓடிவரல் பாரும் ரோமை
விசயன் முன்பிலே தெண்டனிட, அவை
திசை அலுவலை விண்டுவிட.

சு கல்லியா காதேஸ் பிரித்தானியொடு
கனிந்த சர்மனி சீரியரின்
எல்லை அரசரின் தூதுவர்கள் வரும்
இயலைப் பாரும் குணவானே, அவர்
ஒயிலைப் பாரும் கனவானே.

௭ சீதியரோடு சர் மாசியரும் வட
திசைத்த ஞூபுதா ரிக்கயரும்
சேதி அனுப்பிய தூதுவர்கள் வரும்
தீர்க்கம் பாரும் திறவானே, மன
ஊக்கம் பாரும் அறவானே!

௮ எல்லாச் சீர்மைகளும் அவற்றின்
எல்லா ஆஸ்தியும் வல்லமையும்
வல்லாளர் எனும் ரோமருக்காம் அவர்
மாட்சிமை மெத்த மகராஜே, ஒகோ
பூச்சியம் மெத்த ஜெகராஜே!

௫. காட்சியின்முன் சாத்தான் இயேசுவுக்குத் துராலோசனை சொல்லுதல்.

விருத்தம்.

மலையினில் ஏற்றிவைத்து மாநகர் ரோமைவேந்து
விலைமலி வளனெல்லாமும் மிமலனும் ஏசுகாண
அலகையன் செய்தப்பாலே அமலனின் முகமேநோக்கி
வலவனின் குமராளென்று மருட்டுவான் உருட்டுவானே.

இராகம், "கனம் கனம் பராபரன்." ஆதிதாளம்.

திபதை.

௧ மறையவன் குமாரனே!
மனுட உபகாரனே!
அறைவனோர் வார்த்தையே;
அமைவதுன் கீர்த்தியே.

௨ சருவமும் நான் காட்டினேன்!
சரிமுறையே தீட்டினேன்;
சொருபமெல்லாம் நோக்கினாய்;
சோதித்துளம் ஆக்கினாய்.

௩ மன்னனிவன் கிழவனே!
மக்கள் இல்லா இழவனே
துன்னெறியால் ரோமையே
துறந்துகப்றீ சீர்மையே.

௪ ஏகிநெறித் ரோகமாய்
இளம்பிடிவை போகமாய்
வேகிறான் செங்கோலதே,
வேறொருவன் பாலதே.

௫ தர்ம நெறியாளனீ?
தத்துவத்தின் தோளனீ?
தூர்மகனைச் சுளுவிலே
துரத்திவிடாய் எளிதிலே.

௬ அப்போ நீ ஆளலாம்,
ஐயனையும் மீளலாம்,
இப்போது நானே
இதற்குதவுவேனே.

௭ வல்லமைதான் என்னதே,
வலியத்தந்தேன் நின்னதே;
சொல்லுமைபோல் வேகமே,
துணிந்து செய்தால் யோகமே.

௮ பெரியமனக் காரனீ!
பிரபலமா வீரனீ
சரியலவே வீணிலே,
தயங்கி நிற்கக் காணிலே.

---

௬. சாத்தான் சொன்னதில் பயனிலாமையை இயேசு தெரியவைத்தல்.

விருத்தம்.

இந்தவா றலகைசொல்ல, ஏசவும் உலகமேன்மை
விந்தையும் மகிமையாவும் வீணிவை நிலேயோளந்தன்
சிந்தையைக் கவருமோஉன் சிறுமனப்படியே சொன்னாய்!
புந்தி இலாதபேயே போவென்றார் போவென்றாரே.

இராகம், மத்தியமாவதி. (திபதை.) அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧ துன்மார்க்கமான வசனங்கள் பேசினாய்
துப்புக்கெட்ட பழம் பொய்ப் பகையானனே!
இம்மாத்திரத்தினால் என் மனம் மாறுமோ
எத்தனே நீ போடா! சருப்ப விஷத்தனே நீ போடா.

௨ மேன்மைப் பகட்டு செல்விக்கை ஆடம்பரம்
மெத்தஎன் கண்கள்முன் வைத்திடல் ஆயினுய்,
சேனைச் செருக்குறு காட்சியில் என்மனம் [டா.
சென்றதுவோ போடா! இவை எனை வென்றிடுமோ போ

௩ சேதிய காலெசு வாலெர்னி கியசு
சிரேத்தை ரசங்கள் தரத்தை பொன் வெள்ளியின்
மாதிரியானதா லங்களைக் காட்டிலும்
மாறுமோ? நீ போடா! என்மனம், வேறுபடுமோடா.

௪ காரியமேகங் கருக எழும்பும்
கதிரவன் முன்னே எதிர் வருமோ சிறு
வாரிய மின்மினி? மாயையால் என்மனம் [டா.
மருளுவதோபோடா! உன் சொல்லால் இருளுவனோபோ

௫ கொல்லன் உலையிலே ஊசி விலைப்போமோ?
கூசாமல் என்னோடு பேசாதே வீணிலே
வல்லடியான வழக்கிங்கு செல்லாது [டா.
மட்டிப்பேயே போடா! அலப்பாதே துட்டப்பேயே போ

எ. சாத்தான் தான் சகல செல்வத்தையும் இயேசுவுக்கு அளிக்கும் சங்கற்பத்தைக் கூறல்.

விருத்தம்.

குத்திரம் உதவாதென்று குணக்குணர்ந் திடினும், ஏசு
சுத்தனை நோக்கிச்சொல்வான் சூழ்பொரு ளிவைகீகண்டாய்
இத்தனை மகிமையாவும் இலவசம் உனக்கீவேனீ
கர்த்தனென் றெனைக்கைகூப்பு காணென்றான் வீணன்றானே.

இராகம், பைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

அறியாயே! நீதான்
அறியாயே!

அனுபல்லவி.

அறியாய் நீ அறிவையானுல்,
சருவ உலகப் பொருளை
சிறியோனைப்போல் வேண்டாமென்றே
அருவருக்க ஞாயமேது— அறி.

சரணங்கள்.

க இந்த உலகும் இதனில், வந்திடு பொருள் அனைத்தும்
தந்தனர் பரம வஸ்து, சொந்தமே எனதுகையில்
சத்தியம், எனது மொழி
பத்தியம், எனை விட்டாலோர்
மத்தியன், இலை உலகுச்,
சொத்திலே பங்காளியாக— அறி.

உ மட்டிலா இப்பொருள்களை, இஷ்டமே செலவுசெய்ய
கட்டளை எனக்குண்டதால், அட்டதிசை மாந்தர் வந்து
காணுவார், என்னை மனம்
பூணுவார், அவர்களுக்கு
வேணுமாம், பவுஷை எலாம்
கோணிடாமலே அளிப்பேன்— அறி.

ங விழுவையோ நீஎன் அடியைத்தொழுவையோ? ஆனாலுலகு
முழுவதும் உனக்குரிமை வழுவிலா தளித்திடுவேன்,
மோசமோ? இது மிகப்ர
யாசமோ? உனதுமேலே
நேசமே, இதை உரைத்தேன்
வசுவே இதற்கிணங்கு— அறி.

அ. இயேசு சாத்தானை இடித்தல்.

விருத்தம்.

விரும்பியே அலகைஇந்த விதம்சொல்லத் துணிந்தபோது,
கரும்புபோல் மொழியும்சாவின் கடுங்கசுப் பொருளும்கண்டு;
திரும்பினர் முகம்பாராமல் சேசுவும் அவனைத்தானோர்
துரும்புமே நிலையான்என்று தூறுவார் கூறுவாரே.

இராகம், சஹானா. ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

ஒற்றிப்போடா, பாதக சாத்தனே!
அடஊமணத்துரும்பே!
ஒற்றிப்போடா, பாதக சாத்தனே!

அநுபல்லவி.

கற்றறி மூடனுன் சுற்றையும் ஈவையும்
முற்றும் வெறுத்தேன் முன்னாலே பகை
உற்றேன் இப்போ அதன்மேலே
போ அப்பாலே— ஒற்றி

சரணங்கள்.

க அருவருப்பான கருவ மொழிகளை
அஞ்சாமற் பேசுறாய் பாவி! அதும்
என் செவிக்கோ சொல்வாய் கூவி!
கெட்ட ஆவி!— ஒற்றி.

உ மானிட நெஞ்சினைத் தான் அதம் ஆக்கினை!
நானும் உனைத் தொழுவேனோ? அணு
வேனும் பயமிலை! ஏனோ!
நிசம் தானோ!— ஒற்றி.

௩ தேவகுமாரன், பொல்லாவி உனைத்தொழ
பாவி நீ கோரிடல் ஆமா! என்றன்
சாபம் பொறுத்திடப் போமா?
போடா ஊமா!— ஒற்றி.

௪ காலம் வருமினி மேலும் அதுவரை
கோலமெல்லாம் ஆடுபோடா! நெருப்
பாலே எரிக்கிறேன் மூடா!
படு வாடா!— ஒற்றி.

௫ அன்னை ஏவைக்கு நீ சொன்னதிலும் இது
என்ன துணி வகங்காரம்! மனம்
கன்னுதென் கோப அகோரம்!
நல்ல நேரம்!— ஒற்றி.

௬ நாதன் ஒருவரின் பாதம் பணிஎன்ற
வேத உரை அறிவாயே! இப்
போதே விலகிடு நீயே!
கெட்ட பேயே?— ஒற்றி.

௯. சாத்தான் இயேசுவின் கோபத்தைத் தணிக்கப் பார்த்தல்.

விருத்தம்.

சினம்கொண்ட யேசுநாதன் சீறியே சொல்லும்ஓசை
கனம்கொண்டு பாம்பின்நெஞ்சைக் கலங்கடித் ததுஆனாலும்
இனும்கொஞ்சம் தெரிதல்வேண்டும் ஏசுவை ஏய்க்கஎன்று
மனம்கொண்டு தேற்றிக்கோபம் மாற்றுவான் சாற்றுவானே.

இராகம், மோகனம். ரூபகதாளம்.

பல்லவி.

இத்தனை கோபமும் நல்லாய, வநதது!
ஏனையா ஸ்வாமி? இது சொல்லாய்!

அனுபல்லவி.

தத்துவம் பார்க்கவே நான் இத்தை எல்லாம் சொன்னேன்!
சமுத்திரத்தை நாய்நக்க அது தீட்டோ? பின்னேன்?—இத்.

சரணங்கள்.

க அருபர் மானிடர் யாவரும் ஒருப்போலே
ஆகமம் தேவரென்றே அறைந்திடும் அதனாலே,
நிருபன் இயேசுஎனற் நிமலனீ அவர்மேலே
நிற்பையோ அலவோ என் றறியக்கேட்டேன் மாலே.-இத்.

உ பிருதுவி அப்பு தேயு வாயுவுடன் ஆகாயம்
பின்னும் அனைத்தையும் ஆள்பிரபுகளும், ஆதாயம்
கருதி எனைத்தொழுவர் அதுபோலே உனிலேயும்
கவனமுற்றே பகர்ந்தேன்; கடுப்பதற்கெனஞாயம்?- இத்.

௩ சோதனை செய்ததினால் உமக்குவந்தது தீதோ?
துணையில் ஒரேமகவென் றுறுதியானால் பின்ஏதோ?
கோதில் மகாவேருவென் றாலும் காற்றுமோதாதோ?
குள்ள நரிகனைந்தால் வாலசிங்கம் பொறுதோ?— - இத்.

ச இந்தச் சோதனையாலே எனக்கு வந்ததோ லாபம்?
இதுவும் வெளிப்படுகில் உமக்கே வரும் பிரதாபம்!
சந்தேகம் தீர்க்க எனக் கிருந்ததே வெகுதாபம்!
சகலமும் தெளிவாச்சு; ஸ்வாமி உனக்கேன் கோபம்?-இத்.

ய. வேறொரு சோதனைக்கு அடிப்போட்டு சாத்தான் இயேசுவை மழுப்புதல்.

விருத்தம்.

தன்னைத்தான் தாழ்த்தினைப்போல் தருணத்திற் கிசைவாய்ப்பேசி,
பின்னையும் புறம்போகாமல், பிடித்ததை எளிதில்நீவேன்
இன்னமும் ஆய்வேனென்றெம் ஏசுவைமுகமன் கூறி
கின்னேர் ஒருவர்இல்லை நிசமென்றான் நிசமென்றானே.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

இந்த உலகிதன் மீது, உனக்
கில்லை இணை; இனி ஏது?

அநுபல்லவி.

சந்தேகமாய் இருந்தேன்; சருவமும் வெளிஆச்சே
ஸ்வாமி மகன் நீயேமற்ற சகலரும் உன்கை வீச்சே—இந்த.

சரணங்கள்.

க பூலோக மேன்மை எம்மாத்திரம்! உன்றன்
புகழ்ச்சிக்கதுவோ பாத்திரம்! உயர்
மேலோகும் கொள்ளாத காத்திரம்! இந்த
மேதினிக்கும் நீயே சூத்திரம்! திவ்ய
சீலன் உனது குணம் தெரியாதவனைப்போலே
சிறியன் உனக்குமுன் சிறப்பியேன் இனிமேலே-இந்த.

உ விண்ணுக்கும் எட்டாததூரம், தனை
வேண்டும் உன் நெஞ்சு விசாரம்! அனைக்
கண்ணுக்கே எட்டாது பாரம், உறக்
கடந்தாய் எருசலை ஓரம்! இதும்
எண்ணவயது பத்தும் இரண்டும் முடியு முன்னே
ஒண்ணும் ரபிகளுக்கும் உபதேசித்தாய் பின்னே-இந்த.

ங முளைசொல்லுமே பயிர்சித்தி, பகல்
முற்குறி வைகறை நெற்றி! உறும்
இளமையில் மானிடர் பெற்றி, எங்கும்
இல்லை உனக்குமேல் வெற்றி! என்றும்
அளவிலா ஞானம் ஒன்றே ஐயா உனக்காநந்தம்
களவிலா மெய்யறிவை கருதுவை அதேசந்தம்—இந்த.

௰௧. அத்தேனை நகரியின் பாடசாலை முதலியவைகளைச் சாத்தான் இயேசுவுக்குக் காண்பித்தல்.

விருத்தம்.

அறிவொன்றே உன்பிரிதி, வேதநூலில்
அடங்காதே அறிவனைத்தும்; கிரேக்கர்தாமும்
நெறியியல்பால் பலதுறையில் ஆய்ந்துதேறி
நிபுணரென விளங்குவதும் நிசமேசொன்னேன்;
சிறிதொருகால் நீஅவரை உனதுமார்க்கம்
திருப்பிடவே விரும்புகில், நீ அவர்களோடே
உறவுறுதல் அவசியமே; அதனால்அத்தேன்
ஒயில்பாரென் றலகையொரு பயில்செய்தானே.

இராகம், ஆரபி. (திபதை.) ஆதிதாளம்.

௧ ஆரும் நிகரிலாத அகண்டாகண்டன் குமார
அதிய சீலனே வாரும்!
சேரும் இம்மலைவிட்டுக் கீழே இறங்குமுன்னர்
செவ்விய காட்சி ஒன்று பாரும்!

௨ மேலத் திசையினில் தென்மேற் கருகினில்
மேவும் எகியனின் தீரம்;
சாலத்தகைமையிற் காணுதே அத்தேனை
சாயுச்சிய அலங்காரம்!

௩ மன்றலின் காற்றெழும் மண்ணும் இளக்கமாம்
மாது கிரேக்கையின் கண்ணே!
என்றும் கலைக்கன்னை வாய்சாலகத்துக்கோ
இவளுக்கிணை இல்லை பெண்ணே!

௪ புத்திக் குறைவிடம் வித்தைக் கிருப்பிடம்
புண்ணியத்திற் கிது ராஜன்!
சத்திர சீாவடி உச்சித சாலைகள்;
சனத்திற்கருளிய நேசன்!

௫ கீர்த்தி மிகும் ஒலிவத்.தோப்பின் அக்கேதும் எனும்
சீரியன் பிளாத்துவின் ஏகாந்தம்;
ஆத்திக் குருவி யுந்தன் சுருதி எடுத்திசைக்கும்
அதிலே, அதையும் பார்; வேதாந்தம்!

எ1

௬ புஷ்பமலை இமத்து முயற்சி சிறந்த வண்டு
பொருந்தி இசைக்கும் அதில் கூடி;
சற்புத்திரர் மனதில் இனிய தியானங்களைத்
தருமே அவை கனிந்து பாடி.

௭ ஊசி நதி இதனில் மாந்திரிகன் குரலில்
ஓடும்; மதில்கள் உள்ளே நோக்கும்,
ஓசை பெறும் பழைய சாஸ்திரிமார்களின்கல்
லூரி எழுந்து முகில் மோக்கும்.

௮ பெரிய அலக்குசந்தர் உலகை செயிப்பதற்கு
பிறங்கு விதிகள் கற்ற சாலை,
அரிய லயிசியமும் இதிலே இருக்குது பார்
அதற்கு நிகரோ மற்ற வேலை!

௯ தோயிக்கரின் குருவாம் சேனோ நிபுணனுடை
தோவா எனும் மேடையும் காணும்,
தேயக் கலைகள் எல்லாம் வீற்றிருக்கும் இதிலே
செல்வம் குறையறவே பூணும்.

௰ வாத்திய கீதமொடு வாக்கின் இசைகளெல்லாம்
வழங்கும் பலவித சங்கீதம்,
பாத்திரமாக இதில் தேவ இன்னிசைபோலே
படிப்பார் செவிக்கிதுவே சாதம்!

௰௧ நடன சங்கீதங்களும் நாட்டிய வித்தைகளும்
நகரம் இதனை விட்டால் இல்லை;
திடனே சகலவித கலைகளை ஒருவரும்
தேட நகரம் இதே எல்லை.

௰௨ வாய்சாலரும் இங்கே ஞானிகளும் இங்கே
மாதவனே என்னைக் கேளாய்!
கூசாமல் போய் இதலரில் நீயும் பழகிவந்தால்
குவலயம் ஆளுவை நாளாய்!

௰௨. அஞ்ஞான கலைக்கியான மாய்கையையும் மெய்ஞ்ஞான நூல்களின் மேன்மையையும் இயேசு சாத்தானுக்கு உரைத்தல்.

விருத்தம்.

உலகபற் கலையைச்சாத்தன் உவந்துரைத் திடவும், ஏசு
பலகுறை அவற்றில்உண்டாம் பாரெனத் தெரியக்காட்டி,
கலகலத் திடல்நீபேயே கர்த்தனார் திருஞானத்திற்
கிலைஅது நிகரென்றோதி எடுத்திட்டார் தொடுத்திட்டாரே

இராகம், "நாட்டினான் நாட்டினானே." தாளம், ஆதி.

பல்லவி.

விண்ணாணம் பேசவேண்டாம், பசாசே! மெத்த,
விண்ணாணம் பேசவேண்டாம்.

அநுபல்லவி.

மண்ணாளர் ஞானமெல்லாம்
எண்ணாளோ? நான் அலனோ?
அண்ணாவி நீயோ? எனக்
கொண்ணாத மார்க்கமதில்— விண்ணா.

சரணங்கள்.

க மேலோக ஞான ஒளி, அடைந்தவர்க்குச்
சாலோகும் ஏகவெளி,
ஞாலறிவென்னும் அளி, இல்லாமை என்ப
தாலேதும் இல்லை இளி;
கோல உலகறிவின், ஓலமெலாங்கனவு
போல நிலை பெறாது,
தோலே அலாமல் என்ன?— விண்ணா.

உ ஒன்றும் அறியேன் என்றானே, தராதலத்தில்
உற்றமுதல் ஞானிதானே;
பின்றை ரண்டாம் ஞானிதானே, கதைகள் கட்டி
பெத்தரிக்க வாயினானே!
நின்ற மறுஞானியோ, நன்று தீது யாவும் இல்
என்றெதையும் ஐயமாய்த்
தொன்றுதொட்டறைந்தனன்— விண்ணா.

௩ மானிடருக்கேற்ற பாக்யம், தனை அறத்தில்
வைக்கும்சில ஞான வாக்யம்!
ஆனசெல்வம் கூடில் யோக்யம்! தீர்க்காயுள் உறில்
அப்பொழுதாம் மிக்க போக்யம்!
ஈன அனுபோகமேசற்
றேனுங்கவலை இலாமை
தான் அதிக பாக்கியமென்
றுன் ஒருவன் ஞானி என்போன்— விண்ணு

௪ தத்துவ பயிர்ச்சி பீடாம்! அறமும் அதாம்!
ஸ்வாமிக்கிந்த ஞானி ஈடாம்!
சித்தமே பெரிய வீடாம்! இவன் மனதில்
செல்வம், இன்மை, ஏக பாடாம்!
கர்த்தனுக்கோ, மனுடர்க்கோ,
சுத்தமே பயம் இலையாம்
செத்திடவோ உலகுயிர்,
வைத்திடவோ மனம்போலாம்!— விண்ணு.

௫ இத்தகையில் ஞானிமார்கள், பிறமனுடர்க்
கெப்படி மெய் ஓதுவார்கள்?
தத்தமையே அறியார்கள்! பரப்ரமத்தின்
தன்மை சற்றும் உணரார்கள்!
எத்தகை இவ் உலகுறப,
வித்தது மனுடர்கள்ப
வத்தினில் விழுந்தரிது,
சுத்தமே தெரியா மூடா!— விண்ணு.

௬ ஆத்துமம் ஆத்துமம் என்பர்! ஆத்துமத்தின்
ஆச்சரியம் காணுவம்பர்!
சாஸ்திரிகள் நாமே என்பர்! சாஸ்திரத்தின்
சாயையும் அறியார் இம்பர்!
நேர்த்தியாய் ப்ரசங்கஞ்செயும்,
சூத்திரக் குருக்கள் என்பர்!
பார்த்திட பொருளிராது,
வார்த்தையின் பகட்டலாமல்— விண்ணு.

௭ தங்களில் அறனைத்தேடி, மகிமை எலாம்
தங்கள் தலை மீதுசூடி;
மங்களம் அநந்தம் கோடி, பெறும்பரம
வஸ்துவினைக் கொள்ளையாடி,

பங்கதிஷ்டம் யோகமென்றும்,
அங்கமைத்த விதிஎன்றும்
எங்கள் சருவேஸ்பரனை
சங்கையில்லாமல் உரைப்பார்— விண்ணு.

௯ சங்கீத வித்தை படிக்க, அத்தேனே ஒன்று
தானே நடனம் நடிக்க?
சிங்காரத்தாளம் அடிக்க, அஞ்ஞானிகள் தான்
தேர்ந்தவரோ முற்றும் முடிக்க?
மங்காப் புகழ்படைத்த,
எங்கள் எபிரேயர் குலம்
தங்குமே சங்கீதம் எல்லாம்,
இங்கிதமுடன் சிறந்து— விண்ணு.

௧௦ யூதர் எங்கள் வேதசாஸ்த்ரம், நிறைந்தது சங்
கீத உயர் தேவ தோத்ரம்!
நாதம் இசற்கேது பாத்ரம்? முதற்றரத்து
நட்டுவரே யூத கோத்ரம்!
ஆதலால் அத்தேனேயர் எம்,
வேதமதிலே இருந்தே
கீதபாவனை முயன்று,
சாதனையாளுர் அறிநீ!— விண்ணு.

௰ முற்காலம் புத்தி மயங்கி, பாபிலோனில்
முட்டுப்பட்டார் யூதர் தியங்கி,
அக்கால் அவர்கள் உயங்கி, கின்னரங்களை
அலரியில்விட்டார்கள் முயங்கி;
தக்க அவர் சுரமு
ழக்கப் பகைஞர் அவர்
மிக்க விரும்பியும் எ
டுக்கப் போகாதென்றாரே— விண்ணு.

௰௧ அக்கியானப் பாட்டும் முறையும், பலவருண
அருவருப்பினாலே நிறையும்;
சிக்கான காதை கறையும்; உயிர் வதைக்கும்
தேவடியாள் கண்ணில் உறையும்;
பொய்க்கோல தேவர் பாட்டை,
மெய்க்கோன் புகழ்நிறையும்
எக்கால் சீயோன் கவிஞோர்,
வைக்கத் தருதி உண்டோ?— விண்ணு.

௰௨ வாய்சாலகம் என்றாயே; அத்தேனர் வாக்கு
வல்லவர்கள் என்றாய் நீயே;
கூசாமல் பொய்யின் வாயே; அவர்களைக் கைக்
கூலிபேசினாயே பேயே;
ஏசாயா ஆதி தீர்க்கர்,
பாசாங்கிலாது சொன்ன
வாரளைக்கவர்கள் முழுத்
தாஷணை நிகர் ஆகுமோ?— விண்ணா.

௰௩. சாத்தான் சினந்துரைத்தல்.

விருத்தம்.

மன்னவன் சுதனார்வசிம் மறுவுரை இடித்தபோது,
சன்னைசெய் சாத்தனதன்கைச் சரமிழந்ததனால் நொந்தே;
என்னநான் சொல்லஎன்றே எதிர்மொழிக் கிடைகாணாமல்
இன்னமுந் துலிவேன்என்சொல் எடுத்திட்டான் கொடுத்திட்டானே.

இராகம், சங்கராபரணம். திரிபுடதாளம்.

பல்லவி.

இனிஎன்ன நான் சொல்லுவேன்? வேறே
எதைச் சொல்லி உனைக் கெல்லுவேன்?

அனுபல்லவி.

உனை நான் மிகவிரும்பிக்
கனிவாய் மொழிந்த சொல்லை
முனிவாய் உதைத்துவிட்டாய்!
தனியே இருந்து கெட்டாய்!— இனி.

சரணங்கள்.

௧ ஆக்கமதை வெறுத்தாய், அபிமான
ஊக்கமதை அறுத்தாய்;
நீர்க்கவலி செய்யும், போர்க்கிரியைகளை
ஏற்காதென்று சொல்லிப் போக்கினை என்மதி— இனி.

௨ மன்னர் முடிபகைத்தாய், மகிமை
என்ன என நகைத்தாய்;
நன்னயமாக யான் சொன்ன அனைத்தையும்
சின்னத்தனமாக உன்னி மறுத்தனை!— இனி.

௩ காட்டில் இருப்பதுவே, உனக்குள்ள
வேட்டல் விருப்பதுவே,
மேட்டில் அலைந்தேஉன் பாட்டில் நிர்ந்தனை
மீட்டும் அங்கேசெல்ல, நாட்டம் ஆனாய்போலும்— இனி.

௪ தந்தை தவிதரசில், எளிதில் நீ
இந்த நல்ல வயசில்;
வந்திட நான்சொன்ன, விந்தைதனை வெறுத்தாய்,
புந்தி இல்லாமல்நீ நொந்திடுவாயினி— இனி.

௫ துக்கமுகத்தோளாய், உனக்கொரு
சோதிடக் குறிகேளாய்!
லெக்கனம் பார்த்ததில், விக்கினம் கோள்பகை
வெட்கம் வருத்தமும், மிக்க உனக்குண்டு— இனி.

௬ அடிகள் மிகப்படுவாய், கடைசியில்
அவதியாய் உயிர் விடுவாய்!
மிடியுற்றும் நித்திய, முடிசூட்டுவாய் நிசம்! [இனி.
அடியும் முடியும் இல்லா, நெடுமுடியே சொன்னேன்—

௰௪. சாத்தான் இயேசுவைப் பழையபடி வனத்திலே கொண்டுவந்து நிறுத்திப் பலவிதமாய் அமளிபண்ணல்.

விருத்தம்.

சோதனைப் பேயிவ்வாறு சொல்லவும் கடிதில், ஏக
நாதனைத் தூக்கிமுன்போல் நள்ளடவியிலே விட்டான்;
பாதகன் மறைவில்நின்றான் பகலவன் அடைந்துபோனான்,
ஆதலால் இரவுவந்த தலைசயும் மயல்செய்தானே.

இராகம், “பரனே பரப்பொருளே.” தாளம், அதி.

கண்ணிகள்.

௧ வான ஒளி மறைய, இருள்
வந்தது யாவும் அயர்ந்திடவே;
ஞான வடிவெமது, இயேசு
நாதன் உலைவினால் வேதனையாய்

௨ பட்டினியால், குளிரால், மெத்தப்
பங்கப்பட்டார் மனத் துங்கவுனார்;
தட்டாத் தனிமையிலே, மரச்
சார்பினிலே வெகு சோர்புறவே.

௩ பாயோ தலையணையோ, இன்றி
பத்தரைமாத்திலும் சுத்தத்தங்க
காயமதை விழுத்தி, தூங்கும்
காலையிலே மாய சாலகன்பேய்,

௪ தலைமாட்டில் வந்துநின்று, வெகு
சற்பனையாகவே சொற்பனங்கள்
பலவாகத் தானெழுப்பி, தூக்க
பங்கமுண்டாக்கினன் சங்கடமாய்.

௫ மண்டலம் ரண்டுநின்றும், இந்த
வையம் நடுங்கவே மெய்கிடுங்க,
எண்டிசையும் ஒலிக்க, இடி
எங்கும் முழங்கின சங்கை இல்லை.

௬ சோனைவாரி பொழிய, அந்த
சோரியில் அக்கினி மாரி என்ன,
வானோடி மின்னல் மின்ன, பல
வட்டத்திலே இடி பட்டுவிழ.

௭ காற்று புயல் எழும்பி, இருங்
காட்டில் வளர்பல நீட்டுமரம்,
வேற்றுமை இல்லாமல், தங்கள்
வேரோடறுந்து விழுந்ததுவும்.

௮ பாதி நடுமுறிந்து, தரைப்
பற்றினதும் தலை அற்றனவும்,
மோதிப் பிளந்ததுவும், சில
மூடுமிற்க உடல் ஒடினதும்.

௯ நரகத்தின் பேய்க்கணங்கள்; ஏசு
நாதனின் உக்கிர சோதனைக்காய்,
அருகாண்மையில் திரிந்து, பல்
ஆரவாரங்களைக் கோரினதே.

௰ கூவேகூ கூவென்று, சில
கோட்டிகள் பண்ணின காட்டினிலே,
ஊளேவூ ஊவென்று, சில
ஊளைகள் இட்டன கூளிகளே.

௰௧ கீச்சுக் கீச்சென்று சில, நின்று
கெக்கலிகொட்டின துர்க்குணமாய,
சீச்சீச்சி என்றுசில, நின்று
சித்திரம் செய்தன துர்ச்சனப்பேய்.

௰௨ அக்கினி அம்பிறைத்தார், சிலர்
ஆண்டவன் நெஞ்சினில் பூண்டிடவே,
இக்கோலம் செய்தனனே, அந்த
இரவுமுழுதும் அரவமகன்.

௰௩ மலைமேல் புயல் அடிக்க, மலை
மருண்டிடுமோ தலை உருண்டிடுமோ?
நிலையில் பிரிய இல்லை, ஏசு
நிச்சயனுக்கெதும் அச்சமுண்டோ?

௰௫. கிறிஸ்துவுக்குப் பாடுகள் உண்டாம் என்று சாத்தான் குறிசொல்லுதல்.

விருத்தம்.

இக்கெடியாகச்சாத்தன் இரவெல்லாம் விஷத்தைவார்த்தான்
தக்ககால் இரவிதோன்ற சகலமும் விலகல்ஆச்சே;
அக்கிரமப்பிதாமீண்டமலன்முன் துணிந்துதோன்றி
துர்க்குறி இவைகாண்என்று சொல்லுவான் சொல்லுவானே.

இராகம், தோடி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

க குறிசொல்ல நான் பெரியன்! எல்லா
குறவரும் எனைக் கற்றே குறிசொல்லுவார்,
அறிவனே சகலமும் நான்! விகட
அற்புதம் சொல்வேன் விற்பனமாய்.

உ முக்காலக் குறிசொல்வேன், நல்ல
முகூர்த்தமுண்டோ அதை வகுத்துச்சொல்வேன்
பொய்க்காதே என் குறிதான், இல்லா
பொய்யையும் மெய்போல புளிகிடுவேன்.

௩ காசு பணம் எனக்கு வேண்டாம், அனைக்
காசுமின்றி குறி பேசிடுவேன்;
ஆசை உள்ளவர்க்குச் சும்மா, குறி
அனந்தமும் சொல்வேன் தினந்தினமும்.

௪ பண்டு யான் ஏவையர்க்கு, தோட்டம்
பழக்குறி சொன்னது முழக்கமல்லோ!
கண்டது முதலாக, இந்தக்
காசினியோர் எனில் நேசம் வைப்பார்.

௫ இரவினில் நடந்தவைக்கு, சரி
இலக்கணம் சொல்லித் துலக்கிடுவேன்
நரர்களில் இளக்க நெஞ்சர், கண்டு
நடுங்கிடுவார் மெத்த கிடுங்கிடுவார்.

௬ வானம் இடிந்ததென்பார், இதோ
வையகம் நொறுங்கிற்று ஐயோ என்பார்
ஏன்? அதில் இரண்டு உண்டு, அதால்
இன்பமும் சிலவேளைத் துன்பும் உண்டு.

௭ கட்டுண்ட வாயுஎல்லாம், இடியால்
கதறி அங்கங்கே சிதறிவிடும்
கெட்ட விஷஆவி, மின்னல்
கெடிகொண்டெரிந்து வடிபடுமே.

௮ ஆள்மேல் ஒருவேளை, இடிவிழுந்
தாபத்துண்டாகும் சாபத்திலே;
மாளு மிருகங்களும், சிலசால்
மரங்களும் எரிந்து சுருங்கிவிடும்.

௯ நேற்றைக் குண்டானகுறி, சொல்வேன்
நின்னாலே வந்ததே உன்னாணைகாண்;
சாற்றினேன் நான் உனக்கு, நல்ல
சமையம் விட்டால் ஏதும் குமையும் என்றேன்.

௰ தாவீதின் ஆசனத்தை, எடுக்க
தக்கசமையம் என்றேன் நிற்கட்டென்றாய்;
ஆவது ஆங்காலம், வலிய வந்
தடிபிடியாய் கைமேல் படியும் என்றாய்.

௰௧ தீர்க்க தரிசிகள்தாம், உனக்கே
சேரும் தவீதுகோல் நேரும் என்றார்;
மார்க்கமும் வருங்காலும், எழுதி
வைத்திலரே ஆக மத்தினிலே.

௰௨ இதுவே காலமென்றேன், இதுவிட்டால்
இடுக்கண்வந்தே உனை ஒடுக்கும்என்றேன்
அதுபோல் குறிகேளாய், இவைஎல்லாம்
ஆகாதே உனக்கு ஆகாதே.

௰௩ விக்கினம் உனக்கு வரும், பலபல
விபத்துகள் வந்து வபித்திடுமே;
துர்க்குறி இதுகாணும், நான்
சொன்னது கேட்டால் சுகமுருவாய்.

௰௬. இயேசுவின் உத்தரச் சுருக்கம்

வெண்பா.

இல்லா தவற்றை இருப்பனபோலே அமைத்துப்
பொல்லாத சாத்தான் புளுகிடவே—வல்லகிறிஸ்
தேனடா இந்த இறுமாப் பிந்ற் பயப்ப
டேனடா என்சொரு ரே.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

ஏன் அலைப்புகிருய்! பசாசே!
ஏன் அலப்புகிருய்!

அநுபல்லவி.

நீயே தான் பெரியவன்போல்— ஏன்.

சரணங்கள்.

க தூறலால் நனைந்தேன் வேருெரு பயமும்
துன்பமும் அடைந்திலன் போ பேயே!— ஏன்.

உ மின் இடி என்று பண்ணுருய் மெத்த!
வெள்ளம் பனிக்குப் பயப்படுமோ?— ஏன்.

௩ துர்க்குறி என்று பொய்க்குறி சொன்னுய்!
துலுக்கக் குடியில் பேயாட்டேன்?— ஏன்.

௪ உன் சொல்லைக் கேட்டுன் உதவியும் கோர
உன் மரபறியேனே? போ, பேயே!— ஏன்.

௫ வீணுய் அலப்பி விணைகெட வேண்டாம்!
வெற்றுரல் இடிக்க மா வருமோ?— ஏன்.

௬ ஆங்காரம் மிஞ்சி அநர்த்தம் சொல்லாதே!
ஆகாயத்திலே சிலம்பம் என்ன?— ஏன்.

௰௭. சாத்தான் இயேசுவிடத்தில் நான் இன்ன காரணத்தால் உன்னைச் சோதித்தேன் என்னல்.

விருத்தம்.

நாகவா கனத்தான்யேசு நாதனின் சொல்லைக்கேட்டு,
மூகமே நின்றுகோப மூர்க்கமாய் நிறைந்துமீண்டும்
ஏகனின் சுதனேநின்னை இன்னகா ரணத்தினாலே
தாகமாய் மனஞ்சோதித்தேன் தானென்றான் வீணென்றானே.

இராகம், ஆகிரி. அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧ அற்புதம் கன்னிகை உற்பவமான குமாரா! தவீ
தண்ணல் குலத்தினில் தண்ணளி பெய்த சிங்காரா!

௨ தேவகுமாரனீ யாவகை? என்று சந்தேகமே! அதை
தீர்த்துக்கொள்ளும்படி பார்த்துவந்தேன் அனுபோகமே.

௩ காசினி மீதினில் மேசியாதாம் வருவாரே, என்று
கற்ற இருடிகள் மெத்தஉணா சொல்லினாரே.

௪ நீ பிறக்கும் செய்தி காபிரியேல் வெளிதூவ! வானம்
நின்ற அரூபிகள் உன்றன்மேலே இசை கூவ!

௫ பெத்தலகேமினில் சுத்தனீ தோன்றின ராவினில், தூதர்
பேரொலி கூறினர் ஆரவாரித்தவர் பாவினில்.

௬ அன்றுமுதலுனை என்றும் தொடர்ந்ததென் கண்ணே, இதோ
அப்படியே வந்தேன் இப்பொழுதும் இதை எண்ணே!

௭ பிள்ளைப்பிராயத்தில் துள்ளும் இளமையில் நானே, உனைப்
பின்னும்முன்னும்பார்த்தேன் இன்னமும் அப்படித்தானே.

௮ முப்பதில் தீட்சைநீ மெய்ப்புறவே பெற்றபோது, தேவ
முக்கிய சாட்சியும் புக்கினதே என்றன் காது.

௯ தேவனின் சாட்சியும் ஆவியின் காட்சியும் சேர, இது
திட்டம் பார்ப்பேனென்று கிட்டினேன் சந்தேகம் தீர.

௰ எந்த விதத்தில் நீ சொந்தமகனெனத் தேற, உடன்
என்றன் மனதினில் நின்ற பழம்பகை மீற.

௰௧ கர்த்தன் மகன் என அர்த்தம் பலவிதம் ஆமே, நானும்
காசினி மாந்தரும் தாசரும் மக்களும் தாமே.

௰௨ சோதனை செய்தேன் உன்மீது பலவிதம் நானே, மகா
சுத்தன் உனைவெல்ல வித்தை இல்லை! அறிந்தேனே.

௰௩ மலைகள் இழகிலும் நிலைபெயராதுன்றன் நெஞ்சமோ, மகா
வச்சிரம் என்றியான் அச்சங்கொண்டேன் இப்போ கொ
ஞ்சமோ!

௰௪ இன்னம் ஒருபோழுதுன்னையான் சோதிக்க வேணும், அ
எந்தவகையில் நீ விண்ணோர் மகனெனத் தோணும். [ப்போ

௰௮. சாத்தான் இயேசுவைத் தேவாலயத்தின் உப்பரிகைமேல் நிறுத்தி, தாழக் குதிக்கச் சொல்லுதல்.

விருத்தம்.

இன்னம்ஒரு விசை என்று சொல்லி, பேயும்
ஏசுவினை அந்தரமோர் நிமிஷந்தூக்கி,
அன்னவனம் வெளியாவும் கடத்திச்சென்றான்
அழகான எருசலேமு நகரம்சேர்ந்து,
பொன்னிறொளி ஆலயத்தின் சிகரமீது
புகலுமதின் கொடிமுடியின் முனைமேல்விட்டு
நின்னுடைய வலியறிய இதன்மேல் நீதான்
நில்என்றான் அலதிழிந்து செல்என்றானே.

இராகம், இந்துஸ்தான் கருபா. ஆதிதாளம்.

பல்லவி.

திறமுண்டோ, தரை குதிக்க? நின்னை
தேவசேய் என்று யான் மதிக்க! உனக்கு

சரணங்கள்.

௧ குறவரும் மருளும், குன்றத்தில் உயர்ந்த
கொடுமுடி இது கோவில் வஸ்து! கீழே
குதித்திடில் தேவ சமர்த்து! உன்னால்— திறம்.

௨ திட்டமுடனே நீதான், தேவகுமாரன் என்றால்
சட்டமுடன் குதிக்கல் ஆமே! எல்லா
சந்தேகமும் தீர்ந்து போமே! உன்னால்— திறம்.

௩ காக்கும்படி தூதர்க்குக், கற்பிப்பார் என்று தேவ
வாக்கும் இருக்கிறது தானே! பின்னை
மலைவோ பயமோ உனக்கேனே? உன்னால்— திறம்.

௪ பாதம் கல்இடறாதுன் பாதம் அதை தம்கையின்
மீதில் அவர்கள் ஏந்துவாரே! இதும்
வேதவிதி! ஐயம் தீரே! உன்னால்— திறம்.

௰௧. இயேசு சாத்தானை இடித்தல்.

விருத்தம்.

குருவியும் தரிக்கில்லாத கொடுமுடி யதனில்ஏக
ஒருபயம் எனுமிலாமல் ஊன்றிநின் றலகைநோக்கி,
அருவருப் பானபேயே அடுத்தநல் வசனம்தன்னை
கெருவமாய் மறைத்ததென்ன கேடென்றார் ஒடென்றாரே.

இராகம், மோகனம். அடதாளசாப்பு.

பல்லவி.

அடடா! பசாசே! புறப்படடா! உன்றன்
அநர்த்த அலுவல் விட்டு விடடா!

அநுபல்லவி.

தொடர் வேத மொழிதேடிக் கொண்டாயே! பாதிச்
சொல்லை மறைத்து பாதி விண்டாயே!
சுயத்திலே பொய்சொல்லி! நயத்திலே உயிர் கொல்லி!
சூதா! சூதா! சூதா! இனி நில்லாதே!— அடடா.

சரணங்கள்.

௧ "பரிட்சை பாராதே உன் கர்த்தனை" என்றும்
பகரும் வேதமொழி; இத்தனை—சொல்லும்
துரிச்சையாய் பேயே மறைத்தனை; உன்றன்
சுற்றினை ஆருக்கு வைத்தனை? மகா

எரிச்சலானேன் உன்மேல் நான் அடா; இனி
இடம்தராமல் உதைப்பேன் அடா! ஓகோ!
எத்தனை தரமோ நீ வெற்றிகெட்டாய் துட்டா!
எத்தா! எத்தா! எத்தா! இனி நில்லாதே!— அடடா.

௨ அரசும் அந்தரங்கத்தின் சட்டமும்; நாளை
அழியப்போகுதே உன்றன் துட்டமும்! இதிலே
தருவேன் என்றாய் எனக் கிஷ்டமும், நாய்
தரக்கொளுமே சிங்கம் பட்டமும்! சகல
வரிசைகளும் என்கைக் கிட்டியே, உன்னை
வைப்பேனே காவலில் கட்டியே! சித்ரம்
வதைப்பேன் எரிதழல் பதைப்பாய் என்றென்றைக்கும்
மட்டி! மட்டி! மட்டி! இனி நில்லாதே!— அடடா.

௨௰. பேய் விழவும், தேவதூதர் சேர்ந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்தல்.

விருத்தம்.

ஏசுதாம் கொடுமுடியில் நிற்கக்கண்டும்,
இந்தவிதம் ஜெயஒலியில் உரைக்கக்கேட்டும்,
நீசமுறும் பேய்விழுந்தான் இடிபட்டாப்போல்;
நிலைஇல்லை இனிஎன்று தனதுகூட்ட
மாசலகை யோரிடம்போய் விழுந்தசெய்தி
வரலாறு களைஉரைத்தான் அவர்கள்ஏங்க,
தாசர்வந்து கிறிஸ்துவுக்கூண் உதவிஆற்றி
தந்திட்டார் ஏசுவு மகிழ்ந்திட்டாரே.

இராகம், இங்க்லிஷ். திரிபுடைதாளம்.

பல்லவி.

கெட்ட—சோதனைப்ப சாசகன்று போயினான்; உடன்,
தேவ—தூதர்ஏசு நாதர்திருப் பாதமேவினார்.

கண்ணிகள்.

௧ களை—யாயிருந்தநம் மேசுவைஒரு சாயுமானத்தில்
பறந்—தங்குவந்தனர் துங்கவானவர் சங்கைஏந்தினர்—கெ.

௨ மலர்—திளைத்தபள்ள வளத்திலேபசுங் களத்திலேவைத்தார்;
திவ்ய—செழுமைவாசம் கெழுமவருடல் கழுவஆசித்தார்.

௩ பிர—காசவான போசனாதி மேசைபோட்டனர்
ஜீவ—கனிவிருக்ஷ இனியமுர்த பழங்கள் ஈட்டினர்-கெட்.

௪ அவர்—தாகமுற்றும் போகஜீவ தண்ணீர் வாரினார்
ஏசு—சருவவீரன் கலைதெளிய உருவமாறினார்!— கெட்ட.

௨௧. தேவதூதர் இயேசுவின்பேரில் வெற்றிபாடல்.

விருத்தம்.

தேவமா சுதனார்பேயின் சிரத்தினை அறுக்க; தூய
ஆவிகள் சேர்ந்துவேண்டு மாம்பணி விடைகள்செய்து
மேவிய கிறிஸ்துகொண்ட வெற்றிமேல் பரமனைசைப்
பாவினில் கனிந்துகூடிப் பாடினார் ஆடினாரே.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧ தந்தைச் சொரூபம் வந்த குமாரன்!
சத்துருப்பேயினை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௨ விண் அரியணையோ, மண்ணவர் திணையோ,
மேவியும் பேதுறார் வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௩ காட்டில் சென்றாலும் வீட்டில் நின்றாலும்
கருதுகருமம் விடான் வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௪ பரமகுமாரன் நரரவதாரன்
பரதீசு சோரனை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௫ ஆதமின் நேசன் அவனியர் பாசன்
ஆதத்தின் சர்ப்பத்தை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௬ ஏதனைப் பிடித்தார் காதனை அடித்தார்
என்றைக்கும் பேயினை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௭ மைந்தர் எக்காலும் மகிழுவார் சாலும்
வஞ்சபசாசினை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௮ இனிபயம் இல்லை, இனி ஏது தொல்லை!
ஏசு பசாசினை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௯ தோட்டத்தை விட்டே துரத்தி எம் ஏசு
சோரன் பசாசினை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௰ மின்னலின் விரைவில் மேகத்தினின்று
விழுந்திடப் பேயினை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௰௧ பன்றிகள் உடலில் சென்றவை ஒளிக்க
பணிவாக வேண்டிட வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௰௨ அவியாத நரகில் அனவர்த காலம்
அலகை அலறிட வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௰௩ வாழி! மேலான மகத்வ குமாரன்!
மகராஜன் ஏசுவே வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௰௪ சமஸ்தவகாசன் தரணியோர் நேசன்
சருப்பத்தலையனை வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௰௫ ஏவையர் நேசன் பேய்வினை நாசன்
ஏசுக்கிறிஸ்தையா வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௰௬ மண்ணவர் ஆட விண்ணவர் பாட
மகுட பரதீஸ்பதி வென்றார் வென்றார்!—ஜெயஜே!

௨௨. நூன்முடிவு.

விருத்தம்.

இன்னவா றருபர்போற்றி இறையவன் சுதனார்ஏசு
மன்னனை அமுர்தாற்றேற்றி மகிழ்வுற வழிவிட்டேக;
பன்னரும் சிறப்பில்ஏசு பரதிசுமீண்டோன் கன்னி
அன்னையின் பதிக்குச்சென்றார் அனைவரும் மகிழஆமென்.

வாழி.

நித்தியந் திரியேகத்தின் நிருமலன் மகிமை வாழி!
சுத்தமாஞ் சுபவிசேடத் தொண்டர்மெய்ச் சபைகள் வாழி!
மில்ற்றனின் குலமும் வாழி மீட்சியின் கவியும் வாழி!
சத்தியம் செயமே வாழி தராதலம் அனைத்தும் வாழி!

முற்றிற்று.